உ

இலக்கிய கலாநிதி
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர் ...ன்
தொண்ணூற்று நான்காவது
# பிறந்ததின விழா



## பிறந்ததின உரை
### பண்டிதமணியின் மும்முகங்கள்


மாவை, பண்டிதர்
க. சச்சிதானந்தன் அவர்கள்
B. A. (Hons) Lond, M, Phil (Lond)
Dip-in-Ed (Lond)


பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை
முன்னைநாள் தலைவர், வேலணையூர்
பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை அவர்கள்

நினைவுரை


திரு. செ. பாலச்சந்திரன் அவர்கள், B. A. (Hons) Cey.
M. Sc. (Birm)
சிரேஷ்ட விரிவுரையாளர் — I, புவியியற்றுறைத் தலைவர்,
யாழ். பல்கலைக்கழகம்.



வெளியீடு:
பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை
..7-06-1993

உ

# வெளியீட்டுரை

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் தொண்ணூற்று நான்காவது பிறந்த தினம் இன்று 27-06-1993ஞாயிறு ஆகும். 13-03-1986இல் அவர்கள் அமரரானார்கள். சென்ற நூற்றாண்டின் இறுதியிலே தோன்றி [27-06-1899] இந்த நூற்றாண்டின் பிற்பகுதிவரை வாழ்ந்தவர்கள் பண்டிதமணி அவர்கள். நாவலர் பரம்பரையில் வந்த அவர்கள் தனக்கெனவே ஒரு பரம்பரையை உருவாக்கினார் என்று சான்றோர்கள் பலர் பேசியும் எழுதியும் உள்ளார்கள். அந்தப் பரம்பரை இப்பொழுதும் இருக்கின்றது.

பேச்சினாலும், எழுத்தினாலும், நடைமுறைகளினாலும் மக்கள் மனசில் நிறைந்துவிட்ட அவர்கள் ஜீவந்தராக இருந்த காலத்திலேயே அவர் குறித்து எடுத்த விழாக்கள், மலர் வெளியீடுகள் நூல் வெளியீடுகள் மிக மிக அதிகம். பண்டிதமணி அவர்கள் அமரத்துவம் எய்திய பின்னரும் கூட நினைவுதின விழாக்கள் ஈழத்தின் பல பாகங்களிலும் இடம் பெற்றன. 20-08-1989 ஞாயிறு முற்பகல் யாழ்ப்பாணப்பல்கலைக் கழகக் கைலாசபதி அரங்கில் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் ஆதரவில் நடைபெற்ற விழா உச்சமானது. பண்டிதமணி நினைவு மலர், செந்தமிழ்க் களஞ்சியம் என்னும் தலைப்புக்களைக் கொண்ட நூல்கள் வெளியிடப் பெற்றன. இவ்விழாவினைத் தொடர்ந்து கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் புலவர்மணி ஏ. பெ. நினைவுப் பணி மன்றத்தின் சார்பில் மட்டக்களப்பிலும் பெருவிழாக்கள் எடுக்கப்பட்டன. பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் பணிகள் குறித்து இடம் பெற்ற ஒரு உரையாடலில் பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபையின் நல்ல பணிக்குப் பண்டிதமணி நினைவு மலர் ஒன்றே போதுமானது என்று அறிவில் முதிர்ச்சி அடைந்துள்ள பேராசிரியர் ஒருவர் குறிப்பிட்டார். பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாகச் செய்து வரும் ப[illegible] உலகறிந்தது.

இந்த ஆண்டு பண்டிதமணி அவர்களது தொண்ணூற்று நான்காவது பிறந்த தினத்தைக் கொண்டாடுவதென்றும் அதற்கு முன்னோடியாகப் பேச்சுப் போட்டி கட்டுரைப் போட்டிகளை நடத்தி வெற்றியீட்டுபவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவதென்றும் பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை தீர்மானம் எடுத்தது. பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபை ஆரம்பித்தபோது தலைமை தாங்கிச் சிறப்பித்தவர் திருநெல்வேலி சைவாசிரியகலாசாலையின் அதிபரும் மூதறிஞருமான மயிலிட்டி திரு. சி[illegible] சுவாமிநாதன்

.. ர்கள். அவர்களின் மறைவுக்குப் பின் நூல் வெளியீட்டுச்சபைக் கு.. தலைமை தாங்கும் பொறுப்பு வேலணையூர் பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் முயற்சிகளுக்கு முதுகெலும்பாயிருந்து பணி செய்தவர் பண்டிதர் சிதம்பரப்பிள்ளை அவர்கள். பண்டிதமணி அவர்கள் பிறந்த தின விழாவில் பண்டிதர் சிதம்பரப்பிள்ளையவர்கள் ஆற்றிய பணியை எடுத்துக்காட்டுவதும் விழாவின் முக்கிய நோக்கமாகும்.

பண்டிதமணி அவர்களோடு பல்காற்பழகிப் பிரபல்யம் அடைந்தவர்களில் மாவிட்டபுரம் பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்களும ஒருவராவார். பலமொழிப் பயிற்சியுடைய இவர் சிறந்த கவிஞருமாவர்.

பண்டிதர் சிதம்பரப்பிள்ளையவர்களிடம் படித்து முன்னுக்கு வந்த பெருமக்கள் வேலணையிற் பலர்; யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் புவியியற்றுறைத் தலைவராக விளங்கும் திரு. செ. பாலச்சந்திரன் அவர்கள் ஒருவர்.

பண்டிதமணி அவர்களது பிறந்தநாள் உரையை மாவை பண்டிதர் சச்சிதானந்தன் அவர்களும், பண்டிதர் ச. சிதம்பரப் பிள்ளை அவர்கள் பற்றிய நினைவுரையைச் சிரேட்ட விரிவுரையாளர் திரு. செ. பாலச்சந்திரன் அவர்களும் நிகழ்த்த முன்வந்திருப்பது மிகவும் பொருத்தமானதே. அவர்கள் இருவரதும் உரைகள் நூல் வடிவம் பெறுவது வருங்காலத்தவர்க்கும் பண்டிதமணி அவர்களையும் பண்டிதரவர்களையும் அறிய விரும்புவோர்க்கும் வாய்ப்பாக இருக்கும் என்பது எமது நம்பிக்கை.

பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றித் திறமையடைந்தவர்களுக்கான பரிசில்களை வழங்குவதற்கு ஆதரவு நல்கிய திருவாளர்கள் ச. பழனிநாதன் (வேலணை மேற்கு, வேலணை) ஆசிரியமணிஆர். ரி. சுப்பிரமணியம் (கொக்குவில்), திரு சி. சதாசிவம் (பண்டிதமணி இல்லம், திருநெல்வேலி) ஆகியோர்களும் பிறந்த தின உரை, நினைவுரையை நூலுருவம் பெறத்தக்க வகையில் ஆக்கி அளித்த பண்டிதர் க. சச்சிதானந்தன் சிரேட்ட விரிவுரையாளர் திரு. செ. பாலச்சந்திரன் என்ப.. களும், நூலுருப் பெறுவதற்கு உழைத்த பண்டிதர் க. உமாமகேசுவரன் அவர்களும் அழகாக அச்சிட்டு உதவிய சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தினரும், பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையினரும் என்றென்றும் நன்றிக்கு உரியவர்கள்.

எல்லாரும் வாழ்க; இன்பமே சூழ்க.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.
27-06-1993

**அ. பஞ்சாட்சரம்**
காரியதரிசி,
பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.

# முன்னுரை

பண்டிதமணியைப் பற்றிப் பலர் எழுதியிருக்கிறார்கள்; ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டதாகவும் குறிப்புரைகள் [8 : 5] உள்ளன. புதிதாக அவரைப்பற்றி எழுத எனக்கு எதுவும் தோன்றவில்லை. ஆனால் அவருடைய மறைவோடு தமிழ்க் கவிதையின் உயிரினைத் தொட்டுக் காட்டும் ஒரு கலைஞனைத் தமிழுலகம் இழந்துவிட்டது என்பதுதான் என் மனதில் மேலோங்கி நிற்கிறது. நான் ஒரு கவிதையை எழுதிமுடிக்கும்போது, என் கண்முன்னே தோன்றும் முகங்கள் சில. இந்த முகங்கள் இந்தக் கவிதையைப் படித்ததும் எப்படி மாறும் என்பது என் மனதில் வரும். அந்த முகங்கள் மறைந்ததனால், கவிதை எழுதும் சந்நதம் தணிந்துவருகிறது, பண்டிதமணியின் முகம், நானிழந்த முகங்களில் விலைமதிப்பற்றது.

எல்லாக் கலையையும் வளர்க்க முயன்றுவரும் இக் காலத்தில் ஒரு கலை அருகிக்கொண்டு வருகிறதென்ற மனப்பதிவு எனக்கு உண்டாகிறது. அதுதான், கற்பித்தற் கலை. அதிலும், கவிதையைக் கற்பித்தல் இங்கு அழிந்துகொண்டே வருகின்றதென்ற மனப்பதிவு உண்டாகிறது. பண்டிதமணியின் மறைவோடு கவிதை கற்பித்தலின் கடைசிக் கலைஞன் மறைந்துவிட்டான் என்றே எண்ணத் தோன்றுகிறது.

அவர் எழுத்துக்களிலிருந்து இக் கலையை மீட்டெடுக்க முடியாது, ஏனெனில் வகுப்பறைகளிலே செய்து காட்ட, அதனைக் கேட்டு, பார்த்துத்தான் ஒருவர் அக் கலையை அநுபவத்தால் அறியவேண்டும் என்பதனாலேயே. பதிவு நாடாக்களும், ஒளிப்பதிவுக் கருவிகளும் பிரயோகத்திலிருக்கும் காலத்தில் வாழ்ந்திருந்தும், அவர் கவிதை கற்பிக்கும் முறையைப் பாதுகாக்காது விட்டது பேரிழப்பாகும். நீந்தக் கற்பிக்க வேண்டுமானால், தண்ணீருக்குள் இறங்கிக் காலைக் கையை அடித்துக் காட்டித்தான் பழக்கவேண்டும். எப்படி நீந்தவேண்டுமென்று பிரசங்கம் செய்து நீந்தப்பழக்கமுடியாது. அதுபோலத்தான் கவிதையைக் கற்பிக்கும் கலையும் உள்ளது. அதிலும் பாலர் களரியில் கற்பிப்பதற்கும், கவிதை கற்பிப்பதற்கும் விசேடமாக ஒரு தனியான பயிற்சி வேண்டும். உயர் வகுப்புக்களிற் கற்பிப்பதற்கு வேண்டிய திறனிலும், பாலரைக் கற்பிப்பதற்கு உயர்ந்த திறன் வேண்டும்.

பண்டிதமணியின் வசனநடை கட்டுரை எழுதும் பாங்கு, அவ டைய பிரசங்கமுறை என்பவற்றிற்கு அவர் பெற்ற இலக் கியங் கற்பிக்கும் முறையே அடிப்படையானது, இது ஒன்று; மற்றது பண்டிதமணியின் மனக்கோலம். இந்த இரண்டிலும் அவர் மனக்கோலம் இரு பிரிவுகளை உடையது. இந்தியத் தமி ழறிஞர் பற்றியதும், இலக்கியக் கோட்பாடு பற்றியது மென இரண்டாம். இவற்றை எடுத்துக்காட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்டதே இக் கட்டுரை.

## I

# முறை

முதலாவது குறிக்கோளை நிரூபிப்பதற்கு அவரது எழுத்துக் களிற் காணப்படும் சில கூற்றுக்களும், நிகழ்ந்த சில சம்பவங்களும் சான்றுகளாக அமையும். நான் குறிப்பிடும் சம்பவங்கள் என் ஞற் கண்டும் காதாற் கேட்டும் நேரடியாக அநுபவித்தவை. ஆகவே, எனது அநுபவச் சான்றுகளை நிகழ்ந்தவாறு சொல்ல வேண்டும். அதன் நம்பகம் என் நேர்மையிலேயே தங்கியிருக் கிறது. மனித மனப் பதிவுகள் நாடாப் பதிவுகள் போல பௌதிக முறையானவையல்ல. எனினும், அவைகளைத்தவிர என்னுல் பதியப்பட்ட சான்றுகளைக் காட்ட முடியவில்லை. எந்தப் பௌதி கக் கருவியைக் கொண்டளந்தாலும் அது நூற்றுக்கு நூறு வீதம் புறவயமாக அமைவதில்லை. கருவியின் பேறுகளை வாசிப்பவன் ஒரு மனிதன். அவன் புலன்களினுல் வாசித்த தரவே பேறு கின்றது; இது விஞ்ஞான புறவயதின் ஒரு எல்லையாகும். அத னுல் என் சம்பவச்சான்றை விஞ்ஞான முறையற்றதென்று தள்ளிவிட முடியாது.

இரண்டாவது குறிக்கோளை நிறுவுவதற்குப் பண்டிதமணியின் எழுத்துக்களிலேயே சான்றுகள் கொடுக்கப்படும். அவர் மனக் கோலங்களில் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ளாது பின்வரு வனவற்றைத் தெரிந்துள்ளேன்.

1. அவர், ஈழத்துத் தமிழறிஞரின் பெருமையை நிலைநாட்டச் சில தென்னிந்தியத் தமிழறிஞர்களில் கொண்ட மனக்கோலம்.
2. இலக்கியம் பற்றி அவர் கொண்ட மனக்கோலம்.

## II

# கவிதை கற்பிக்கும் முறை

கவிதை கற்பிக்கும் முறை, அன்றைய ஆசிரிய கலாசாலைகள் எல்லாவற்றிலும் பிரதானமாகக் கருதப்பட்டதாயினும், கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் மிகத் திறமையாக வகுப்புப் பாடப் பயிற்சி கொடுக்கப்பட்டது. அதற்கு, மகாலிங்கசிவத்தின் கவிதை கற்பித்தல் ஒரு காரணம். அவர் உளவியல் கற்காவிடினும், அம்முறை அவருக்கு இயல்பிலேயே கைவந்ததொன்று. பின்னர் சண்முகரத்தினத்தின் அறிவும் ஆற்றலும் அதற்கு வலுவூட்டியது. பின் பொன் கிருஷ்ணபிள்ளையால் உந்நதநிலையடைந்தது. மகாலிங்கசிவத்தின் முறை பண்டிதமணிக்குத் தொற்றிக் கொண்டது. அம்முறையை, பண்டிதமணி தன்னுடைய இயல்பான படைப்பாற்றலால் மிக மிக விரிவாக்கிப் புதுமை செய்தார். கவிதை கற்பித்தல் ஒரு கலையென்று முன்னரே கூறினேன். அடிப்படை விதிகளைப் பற்றிக் கொண்டு அந்தக் கலையைப் புதிதாக விரித்தார் பண்டிதமணி. ஏற்கனவே தமிழிலக்கிய நூல்களைக் கற்றிருந்த பண்டிதமணிக்கு, பொருளறிவு பெற யாரும் கற்பிக்க வேண்டியதில்லை. ஒரு சமுத்திரத்தில் ஒரு மீன் எவ்வாறு நீந்தியுலாவுமோ அவ்வாறு கவிதா சமுத்திரத்தில் மிக இலாவகமாக விளையாடினர்.

ஹடோ (Haddow) என்ற ஆங்கிலர் 'கவிதை கற்பித்தல்' (Teaching poetry) என்று ஒரு நூல் வெளியிட்டிருந்தார். அதுவே அன்றைய, கற்பித்தலுக்கு மூல நூலாயிருந்தது. பண்டிதமணி வகுப்பறைகளிலே செய்த பரிசோதனைகளின் விளைவுகளை மிக நன்ருகப் பயன்படுத்தி, உளவியற் கோட்பாடுகளைப் பிரயோக முறையாக மாற்றினர். இம்முறை (Gestalt Psychology) என்னும் முழுமைக் கொள்கையின் அடிப்படையில் எழுந்தது. அதன் பிரதானவிதி பகுதிகளின் சேர்க்கை முழுமையாகாது என்பது. ஒரு கவிதையை முழுமையாகவே கொடுக்கவேண்டும். அதன் பின் விஞக்களாலும் ஆசிரியரின் உரையினுலும் அந்தக் கவிதையின் பொருளைத் தெளிவுபடுத்தவேண்டும். பின்னர் முழுமையாக வாசிக்க வேண்டும். இப்படி, மாணவர் மனதில் கவிதையின் பகுதிகளை ஒன்று கூட்டி ஒரு அமைப்புக்குள் கொண்டுவர வேண்டும். அதில், கவிதை வாசிக்கும் முறையிலேயே கவிதை கற்பித்தலின் முக்கால் பங்கு முடிவுறும். அதனுல் அன்றைய ஆசிரியர் மாணவர் கவிதை வாசித்தலை ஒரு முக்கிய அமிசமாகக் கருதி அதற்குக் கூடிய கவனம் செலுத்தினர்கள்.

பண்டிதமணி, கவிதையை வாசிக்கும் முறை கைவந்த, ஒரு கலைஞர். கவிதைப் பின்னணியை மாணவருக்காயினும் ஆசிரிய மாணவருக்காயினும் மனக்கண்முன் வரச் செய்வதில் பல உத்திகளைக் கையாளுவார். அது அவரது படைப்பாற்றலால் பெற்ற சிருட்டிகள்

ஆயிரத்துத்தொளாயிரத்து நாற்பதாம் ஆண்டில் ஒரு நாள் எனது கவிதைகள் சிலவற்றைக் காட்டுவதற்காகப் பண்டிதமணியிடம் போயிருந்தேன். அவற்றில் ஒன்று 'ஆனந்தத்தேன்' என்ற கவிதை நூலில் வெளிவந்தது. ஒரு சிலையைப் பார்த்து அதில் இலயித்த அநுபவத்தைக் கவிதையாக்கியிருந்தேன். பண்டிதமணி இரண்டொரு முறை கண்ணால் வாசித்துவிட்டு, பின் அதனை வாய்விட்டு வாசித்தார். நான் மனதில் கொண்ட அநுபவம் அவர் வாசிக்கும் ஓசையால் எதிரொலித்தது. செய்யுளை இயற்றுபவனிலும், சிலவேளைகளில், அதனைச் சரியாக அநுபவித்த ஒருவன் வாசிப்பதனால் உயிர் பெறச் செய்கிறான் என்பதை உணர்ந்து கொண்டேன்.

மெய்ப்பாடுகள் முருகியலில் அல்லது அழகியலில் வரக்கூடாது என்று சிலர் கூறுகிறார்கள். அவர்கள் நம் மரபு முறையாகவந்த கவிதை மதிப்பீட்டுக் கொள்கைகளோடு வேறுபடுபவர்கள். இதனை, பின்னர் பண்டிதமணியின் இலக்கிய மனக்கோலம்பற்றிச் சொல்லும்போது வருமென்று அதனை விரிக்க விரும்பவில்லை.

திருவாசகத்தைப் படிக்கக் கேட்டு மனம் உருகுகிறார்கள், அதற்குச் சான்றாக அவர்கள் கண்களிலிருந்து நீர் பெருகுகின்றது. திருவாதவூரடிகள் புராணம் படிக்கும் போது, கேட்போர் கண்ணீர் விடுவதைப் பத்து வருடங்களாகக் கண்டிருக்கிறேன். வகுப்பறைகளிலே கவிதைகளைக் கற்பிக்கும்போது, கண்கள் விரிய அசையாதிருந்த மாணவர் கூட்டத்தைக் கண்டிருக்கிறேன். கற்பித்த கவிதைகளை வாய்விட்டுப்பாடிக்கொண்டு விளாமரத்திலேறிக் கொப்பை உலுப்பும் சிறார்களைக் கண்டிருக்கிறேன், கவிதைத் தாக்கம் ஒரு உண்மை.

வன்றொண்டச் செட்டியார் பொன்னம்பலபிள்ளை கவிதைக்கு நயம் விரிப்பதைக் கேட்ட போது நிகழ்ந்ததைப் பண்டிதமணி கூறுகின்றார்.

''செட்டியாருக்குத் தெவிட்டாது தித்தித்து அமுது ஊறுகின்றது போன்ற ஆனந்தம் மேலிடுகின்றது. செட்டியார் இருந்தபடி மெல்ல மெல்ல இடம் பெயரத் தொடங்கிவிட்டார். ஒரு சந்தர்ப்பத்திற் பொன்னம்பல பிள்ளையைக் கட்டித் தழுவி விட்டார்''

இப்படிப்பல இடங்களிற் பண்டிதமணி கவிதையநுபவத் தாக்கத்தைக் கூறியுள்ளார். இன்று கவியரங்குகளுக்குப் பெருகும் மக்கட் கூட்டம் எதைக் காட்டுகிறது; கம்பராமாயணப் பிரசங் கத்துக்கு வரும் மக்கள் வெள்ளம் எதைக் காட்டுகிறது. தமிழ்க் கவிதையநுபவத் தாக்கம் ஒரு உண்மை யென்பதனையே.

கவிதையின் இத் தாக்கத்தின் முக்கால்வாசி அதைச் சரியாக வாசிப்பதனுல் வந்து விடும். இதனை முன்னரே கூறினேன். கனக செந்திநாதன் பண்டிதமணி கவிதையைக் கற்பிக்கும் முறையை மிகச் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

''பேராசிரியர் முன்நடந்த நிகழ்ச்சிகளை முன்னுரையாகக் கூறிவிட்டு, தமக்குள்ள மெல்லிய குரலிலே பாடிக்காட்டினுர். பின்பு, வைகினுர் என்னும் முடிக்குஞ் சொல்லிலிருந்து வினு விடைகள் மூலம் பாடத்தை நடாத்தினுர்.

பேராசிரியர் மணிச்சொற்கள் ஒவ்வொன்றும் மாணவரது இதயத்தை இனிக்கச் செய்து கொண்டிருந்தன. அந்த வகுப்பி லேயிருந்து இன்பத்தேனைப் பருகிய என்னுடைய நெஞ்சிலே பேராசிரியராக வந்த பண்டிதமணி அவர்கள் அசையாத இடத் தைப் பெற்றுவிட்டார்; வைகினுர்'' [5, 2]

கவிதை கற்பிப்பவனுக்கு, கவிதை அநுபவத்தாலெழுந்த உணர்வு உள்ளூற இருக்குமானுல், அவன் வாசிக்கும்போது அவ் வுணர்வைக் கேட்போருக்குத் தொற்றவைக்கிறுன். பண்டிதமணி யின் கட்டுரைகளில், தான் குரலாற் காட்ட முடியாதவற்றைக் கவிதையை அச்சிடும் முறையினுல் காட்ட முனைந்துள்ளார். கவிதைகளில் எங்கே நிறுத்த வேண்டும்; எந்தவரியின் இறுதியை யும் முதலையும் ஒன்ருகச் சேர்க்க வேண்டும்; எந்தச் சீரை இரண் டாகப் பிரிக்க வேண்டும்; எந்தவரியை அடிக்கடி சொல்லவேண் டும்; எந்தச் சொல் கவிதையின் உயிர்க் கருவாக விருக்கிறது என்பதை அச்சிற் காட்ட முயன்றுள்ளார். கவிதையைச் சரியாக வாசிக்கத் தெரிந்தோருக்கு அது விளங்கும் எனினும் இரண்டொரு உதாரணங்கள் காட்ட விரும்புகிறேன்.

**''பெண்ணெனை மனத்திடை பெருந்தகை நினைந்தான்''**

ஒரு வரியிற் பாட்டை நிறுத்துகிருர்,

சற்றே தாமதித்தான் அந்த இராமன்.

'' அடே இராமா ''

ஆறி நின்றது, அறன்; நன்று, [2, 72] என்று பதிப்பித்துள்ளார். ஆறிநின்றது அறனன்று என்று பதிப்பித்திருந்தால் குரல் வேருகும்; கருத்தும் வேருகும்.

''சகுந்தலை நாடகம் அதற்குப் பிரையிடவும் போதாது.

புனைந்த சடை முடிதுளக்கிப்

போரேற்றின் முகம் பார்த்தான்.

ஒரே வரியை யிரண்டுபாதியாக்கி முதலிரண்டு சீரையும் ஒன்ருகவும் அடுத்த இரண்டினையும் கீழுமாகப் பதிப்பித்துள்ளார்,

''இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ''

''விராவரும் புவிக்கெலாம் வேதமேயன இராமன்''

'பயந்த எற்கு எனவும்' 'இடருண்டோ' எனவும், அன இராமன் எனவும் பிரித்தமையை நோக்குக. அதனை மீண்டும் இரண்டுமுறை திரும்பித் தனியே, 'இராமனைப் பயந்த எற்கு' என்பதனைப் பதிப்பித்து ஈற்றில் அதே வரியை ''இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ'' எனக் கொடுத்து முடிக்கிருர். பின்னரும், அடுத்த பக்கத்தில் அதேவரி அச்சிடப்படுகின்றது.

''என்தோழி வல்லவள்; துணை வல்லவள்;

என்று அடிதொழுதாள்.

எனப் பின்பு பிரிக்கப்பட்டு அச்சாகிறது. கம்பராமாயணக் காட்சி என்ற நூலில் இவ்விதமுறை அதிகம் பயின்று வருகின்றது.

கவிதை வாசிப்பதற்கென்றே அன்று [1940] ஒரு புத்தகம் வெளியிடப்பட்டிருந்தது. ஆசிரிய மாணவருக்கு அது பிரத்தியேக பாடமாயிருந்தது. அந்த வாசிப்புக்கலை இன்று அருகிவருகின்றது.

சில வருடங்களுக்கு முன் சங்கீதம் தெரிந்த ஒருவருக்கு ஒரு கூட்டத்தில் வாசிக்கும்படி ஒருபாடலைக் கொடுத்தேன். அவர் அந்தப் பாடலைத் தொண்டையிலே பிடித்துத் திருகிக் கை கால்களைப் பிய்த்துக் கொலை செய்து விட்டார்.

இசைவேறு: கவிதையை வாசிக்கும் ஓசைவேறு.

இந்தக் கவிதை கற்பிக்கும் முறையையே, அவர்தம் கட்டுரைகளில் அடிப்படைவழுவாது, படைப்பாற்றலாற் புதியன வாக்கிக் கையாண்டுள்ளார். புலவர் சரித்திரமாயினும், கவிதையாயினும் இந்த அடிப்படை மாறுமற் செல்கின்றது. உதாரணத்துக்கு இரண்டொன்றைக் காட்டுகிறேன்.

இரட்டையர் பக் 1—3 வரை சந்தர்ப்பமும் அறிமுகமும்
4—6 '' கவிதை அமைப்பு
—7 '' விருத்தி, பகுப்பாய்வு

மதியும் பிறையும் பக் 21—சந்தர்ப்பமும் அறிமுகமும்
24 கவிதைகளின் தொடர்பு, விருத்தி
25— பகுப்பாய்வு, பிறைவந்த இன்னொரு பாடலோடு ஒப்பீடு

இலங்கைவளம் பக் 27-29 இலங்கைவளத்தை அறிமுகம் செய்வதற்கு நீண்டதொரு முன்னுரை கொடுக்கிறுர்.
பக் 30-31 கவிதைகளை வளம் என்னும் மையக் கருவைக் கொண்டு ஒழுங்கு செய்வதனல் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.
பக் 34 பிரயாண முறையை வைத்துக் கவிதையை உச்சநிலைக்குக் கொண்டுசெல்கிறுர்.

இப்படியாகக் கட்டுரைகளின் அமைப்பு முறைக்குத் தனியானதொரு பகுப்புச் செய்யலாம்.

சிலவேளைகளில், கவிதையை அறிமுகம் செய்வதற்கு வெகுதூரம் சென்று நீண்டதொரு முன்னுரையைக் கொடுக்கின்றுர். எதைச் சொல்லுவதற்கு முகஞ் செய்கின்றுர் என்று எண்ணுவதற்கிடையில், மிகநயமாக எடுத்த விடயத்தோடு பொருந்துகிறுர். 'காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள், என்ற கட்டுரையிலே சிந்தாமணிப் பாடலோடு ஆரம்பித்து, சூளாமணிக்குச் சென்று, கம்பனை அணுகி, கதைகளுக்கு வந்துதான் பஞ்ச தந்திரத்திலே இரண்டு புறுக்களின் கதை வருகின்றது என்று சொல்ல வந்த விடயத்தை ஆரம்பிக்கிறுர்.

எடுத்துக்கொண்ட குறளும் அதற்கு எடுத்துக் காட்டான கதைச் செய்யுளும் ஈற்றிலே வந்து கட்டுரை முடிகின்றது. இலங்கை வளம் கம்பரின் 'மாகாரின் மின்கொடி என்ற பாட்

டோடு முகஞ் செய்யப்பட்டு, "அதோ மகாவலி கங்கை பொங்கி ஓடுகின்றது. பேராதனைத் தோட்டத்தை "நோக்குங்கள் என்று ஆரம்பிக்கின்றது. கவிதையை 30ஆம் பக்கத்திலே முழுமையாகத் தருகின்றார்.

சிலவேளைகளில், கவிதையை அறிமுகஞ் செய்யக் கவிஞனிலும் ஒரு படி முன்னே சென்று, தானே ஒரு சொற்சித்திரம் செய்கிறார். உண்மையாக நடந்தது போன்ற ஒரு காட்சியைக் கற்பனை செய்து ஒரு பின்னணியை உருவாக்குகிறார்.

(பார்க்க: ஆடாமல் அசையாமலிருந்தார் ஒட்டக் கூத்தர் என்பது முதல் எல்லாருங் கம்பரையும் புகழேந்தியையும் மாறி மாறிப் பார்த்தார்கள் வரை.) இது உண்மையிற் பண்டிதமணியின் படைப்புப் பின்னணி. திருவினிற்றிருவுளார் யாவர் தெய்வமே என்ற அடியை உயிர்ப்பொருளாகச் செய்த அவருடைய சிருட்டிப் பின்னணி. அவ்வாறே, ஈழநாட்டுப் புலவரிலும் [பக். 52] மனைவியார், புகையிலை எடுத்ததற்கு மகனைத் தண்டிப்பார் போலும் முதல் முதலியார் கண்ணீர் விட்டு அழுது விட்டார் என்பது வரை பொன்பூச் சொரியும் என்ற ஒரு பாடலுக்கு ஒரு நல்ல பின்னணி செய்துள்ளார்.

கட்டுரைகளுக்குக் கொடுக்கும் தலைப்புக்கள் ஒவ்வொரு மகுடங்கள்; ஒரு அதிசய அதிர்ச்சியைத் தரவல்லன. 'வடுவடு நுண்ணயிர்' 'இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும்', 'தாடலைப் பட்டார் மணிவாசகனார்' 'கலியுகம் 1ஆந் திகதி', 'தர்மத்துக்குத் தவணையில்லை.' 'தமிழ் நுதலியது களவு, களவியல் நுதலியது தமிழ்; 'அலடினில் வராத மந்திரவாதி' என்பன சில.

## IV

**பண்டிதமணியின் வசன நடை:**

பண்டிதமணியின் வசன நடையைப் பற்றி ஆங்காங்கே சிலர் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், சுசீந்திரராஜா அவர்கள் [8] ஒரு கட்டுரை வரைந்துள்ளார்கள். அக் கட்டுரையில் பேச்சு வழக்கு இலக்கிய மொழி இரண்டுக்கும் பொதுவான சொற்களைப் பண்டிதமணி பிரயோகித்துள்ளாரென்றும், சிறிய வாக்கியங்களை விருப்புக் காரணமாகக் கையாண்டுள்ளாரென்றும், சிலசொற்களுக்குத் தாம் கருதும் பொருள்களைத் தாமே கூறிச்செல்லும் நடையுத்தியைக் கையாண்டுள்ளாரென்றும், எதிர் மறைவினை முற்றுக்களுக்கு' 'க்க்' சேர்க்காத வடிவத்தையே கொண்டுள்ளாரென்றும் குறிப்பிட்டுள்ளார். அவரே [8, 29] "பண்டித

மணிக்குப் பேரும்புகழும் தேடித் தந்தவற்றுள் அவரது மொழி நடை மிகமிக முக்கியம் வாய்ந்தது" எனக் காட்டியுள்ளார். அதில், "பாடசாலை மாணவரை எதிர்நோக்கி, ஆசிரிய மாண வர்கள் கையாள வேண்டிய மொழியின் தன்மை பண்டிதமணியின் உள்ளத்தில் ஆதிக்கம் பெற்றிருந்தது என்றால் மிகையாகாது. போதனையிலும் சாதனை நன்று என்று மொழியைப் பொறுத்த வரை, ஆசிரிய மாணவர்களிடம் வளர்க்க விரும்பிய தெளிவையும், எளிமையையும் எளிமையில் வலிமையையும் தம்மிடத்தே வளர்த்துக் கொண்டார்" ரென்பது அவர் கூற்று.

பண்டிதமணி வகுப்பிலே இலக்கிய பாடத்தை, சிறப்பாகக் கவிதையைக் கற்பிக்க வேண்டிய தேவையிருந்தது. அதைச் சிறப்பாக நிறைவேற்றப் பிரயோகித்த மொழி நடையே அவரு டைய எழுத்து நடையிலும் புகுந்தது எனலாம். அன்று எடுத் துக் காட்டுப் பாடம் என்று ஒன்று நிகழும். அதில் பேராசிரியர் களும் கற்பிக்க, ஆசிரிய மாணவர்களும், சக ஆசிரியர்களும் அவ தானித்து விமர்சிக்க ஆயத்தமாயிருப்பார்கள். பண்டிதமணி அப் படியாகப் பாலர் வகுப்புக்களுக்கு எடுத்துக் காட்டுப் பாடம் படிப்பித்தாரோ தெரியாது. ஆனால், தனது ஆசிரிய இறுதித் தேர்வுக்கு ஒரு பாடத்தைப் பாடசாலை மாணவர்களுக்குக் கற்பி யாமல் தப்பியிருக்க முடியாது. அதனால் அவர் மாணவர் நிலைக்கு மொழி நடையை இறக்க வேண்டும். அதிலும் கவிதை கற்பித் தலில் அவர்களுக்குத் தன்னநுபவ உணர்வைத் தொற்ற வைப் பதற்கேற்ற சொற்பிரயோகம் வேண்டும்.

கவிதையின் இரசனையை வரச்செய்வதற்கேற்ற மொழிநடை வேண்டுமென்பதைப் பொன்னம்பலபிள்ளையைப் பற்றிக் கூறும் பொழுது பண்டிதமணி குறிப்பிட்டுள்ளார். [ 2 . 88 ]

> இலக்கியங்களிலே உயிரான இரசனைக்குப் பொருள், ஏற்ற நடை, இந்த இரண்டுமாயிருந்தவர் பொன் னம்பலபிள்ளை. இவ்வாறு குறிப்பிடுவர் தமது தேவைக் கேற்ப ஒரு நடையை உருவாக்கினார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தேழாம் ஆண்டளவில் பண்டிதமணியை அவருடைய அபிமானமாணவருள் ஒருவரும் எனது ஆசிரியருமான பருத்தித்துறை மு. ஏரம்பமூர்த்தி யவர்கள் திருநெல்வேலியில் பண்டிதமணியின் இல்லில் முதன் முதலாக அறிமுகஞ் செய்து வைத்தார். ஏரம்பமூர்த்தியவர்கள் பண்டிதமணியையே எல்லா விடயத்திலும் பின்பற்றியவர்.

அப்பொழுது நான் ஒரு எழுத்தாளஞக முளைகொண்டிருந்தேன். பண்டிதமணியிடம் அன்று பேசிய விடயம் உரைநடை பற்றிய விடயம். அப்பொழுது பண்டிதமணி கல்கியைப்பற்றியும் அவரது உரைநடையைப்பற்றியும் மிகப் புகழ்ந்து பேசினுர். அன்றைய சிறு கதைகள் நாவல்களை நோக்கினேம். அப்பொழுது ஏரம்பமூர்த்தியவர்கள் முன்னரே கூறியது போல, கல்கியின் வசனநடையில் பண்டிதமணிக்கிருந்த பிரேமையை அறிந்தேன். அப்பொழுது பண்டிதர் கதரணிபவர். ஏரம்பமூர்த்தியவர்கள் உடையிலும் அவரைப் பின்பற்றியவர். அதன்பின் பண்டிதமணியிடம் அடிக்கடி போவதுண்டு. மாவிட்டபுரத்திலிருந்து நடையாகப் பண்டிதமணியின் காவிய பாடசாலைக்குச் சனி ஞாயிறுகளில் செல்வேன். பாலபண்டித பண்டித வகுப்புக்களுக்காயத்தம் செய்வதற்காக நான் செல்லவில்லை. காவிய பாடசாலை நூலகத்துக்கு, அப்பொழுது சுடச்சுட வந்திருந்த நாவல்களை வாசிக்கவே சென்றிருந்தேன். 'டிக்கன்ஸ்' எழுதிய இரு நகரக் கதைகள் [Dicken's Tale of Two cities], 'ஸ்ரிவென்சனின்' இரட்டை மனிதன் என்றிப்படிப்பட்டவற்றை வாசித்து மாலையில் மீளுவேன். இதை யார் தருவித்திருப்பார்கள் என்பதை ஊகித்தால், பண்டிதமணியின் அன்றைய போக்கு விளங்கும்.

'கல்கியும்' 'மாலி'யும் 1938ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள். மே மாதம் 27ஆம் தேதியாயிருக்கலாம். மாலை எட்டு மணிக்குப் பருத்தித்துறையிலிருந்த என் வீட்டுக்கு வந்த ஏரம்பமூர்த்தி கல்கிக்கு வரவேற்பெழுதவேண்டுமென்றுர். இரவிரவாக எழுதி, காலையில் கல்கி வந்தபோது பருத்தித்துறைச் சித்திவிநாயர் வித்தியாசாலையில் வாசிக்கப்பட்டது. இதற்கு உதவியவர் பண்டிதமணி. அவரும், முதல் நாள் கல்கியை மிகப் புகழ்ந்து யாழ்ப்பாணத்திற் பேசினுர். இரண்டாம்முறை கல்கி யாழ்ப்பாணம் வந்தபோது, மாவிட்டபுரத்துக்கு ஏரம்பமூர்த்தி வந்து கல்கிக்கு வரவேற்பு எழுதவேண்டுமென்று மோட்டாரில் ஏற்றிச் சென்றுர். இது 1951இல் என்பது ஞாபகம். கல்கியின் அத்தனை பாத்திரங்களையும் நடமாடவைத்து ஒரு கவிதை எழுதினேன். அதனை வாசிக்கும்போது கல்கி அப்படியே அசந்து போனுர். இடைக்கிடை அவருடைய தலையாட்டம் கவிதை செய்த தாக்கத்தைத் தெரிவித்தது. இக்கவிதைபற்றி அவரே பலருக்கும் சொன்னுராம். அவருடைய வாழ்க்கை வரலாற்றிலும் இக்கவிதை குறிப்பிடப்பட்டுள்ளது. இதை ஏன் கூறுகிறேன் என்ருல் இந்த வரவேற்பை எழுதவேண்டுமென்பதற்குப் பின்னணி

பண்டிதமணியே என்பதை வற்புறுத்தவே, மேலும் மதுரைப் பண்டிதராயிருந்த பண்டிதமணிக்கு அன்று கல்கியின் வசன நடையிலிருந்த மோகத்தையும் காட்டவே. கனகசெந்தி நாதன் கல்கியும் மாலியும் முதன்முதல் யாழ்ப்பாணம் வந்ததைக் குறிப்பிட்டுள்ளார். [5]

"அவராற்றிய வெற்றிப் பிரசங்கங்களில் இது ஒன்று," என்பது செந்திநாதனின் மதிப்பீடாகும். மேலும் பண்டிதமணி என்ற பட்டத்தை V. K. P. நாதன் முதன்முறையாக வழங்க, கல்கி அதனை அநுவதித்தார் என்பது பண்டிதமணியினதும், கனகசெந்திநாதனதும் கூற்றுக்களிலிருந்து தெரிகிறது. [6 : 93] பண்டிதமணி 'செருப்புக்கட்டியின் கதை'யை எழுதியவர் இரு சகோதரர்கள் என்ற முடிவுபெறாத நாவலையும் எழுதியவர் என்று செந்திநாதன் குறிப்பிடுகிறார். [5] இது பண்டிதமணி 1935ஆம் ஆண்டு தொட்டு 1951ஆண்டு வரை இலக்கியத்தில் எந்த வழியில் நின்றாரென்பதைக் காட்டுகிறது. அவர் வசன நடையை இந்தப்போக்கின் அடிப்படையிலேயே நோக்க வேண்டும்.

ஆயிரத்துத்தொளாயிரத்து முப்பத்தைந்தாம் ஆண்டளவில் இந்தியாவிலும் இலங்கையிலும் தனித்தமிழ் வசனநடையொன்றிருந்தது. பாலசுப்பிரமணியம் என்ற பெயரை இளமுருகனார் என்றும் நாகேந்திரம் என்ற பெயரைப் பணிவேந்தனாரென்றும் பெயர் மாற்றித்தனித் தமிழிலேயே உரைநடையை எழுதியவர்கள் இவர்கள். மகாலிங்கசிவம், நவநீதகிருட்டின பாரதியார், சு. நடேசபிள்ளை, சதாசிவஐயர், விபுலாநந்தர் என்போர் எழுதிய உரை நடையும் பிரசங்க நடையும் வேறொன்று. மதுரைப் பண்டிதராயிருந்த பண்டிதமணி, ஒரு புதுவழியிற் சென்றார். அது அவர் ஆசிரிய கலாசாலைப் பணியிலிருந்து பிறந்தது. கல்கியின் வசனநடையின் போக்கை ஏற்றுக்கொண்டவர் எனினும் தமக்கென்றே ஒரு தனி நடையை உருவாக்கினார்.

பண்டிதமணி, தான் கருதுவதையும், தான் உணர்வதையும் அப்படியே வாசிப்போருக்கும் கேட்போருக்கும் கொடுக்கவேண்டுமென்பதையே குறிக்கோளாகக்கொண்டிருந்தார். அந்தக் குறிக்கோளை அடைய அவர் முதலில் செய்தது வாக்கிய அமைப்பு மாற்றம். எழுவாய் செயப்படு பொருள் என்ற ஒழுங்கில் வரும் வாக்கியங்களின் கட்டமைப்புக்களை மாற்றினார்.

"வந்துவிட்டது கோபம் ஆண்டைக்கு" [2, 57]
"சேர்பொன். இராமநாதன் துரைக்கு அப்பொழுது இருபத்தைந்து வயது. சிரித்த முகம்; தங்கசொரூபம்; அப்பொழுதுதான்

சென்ன பட்டணத்திலிருந்து படித்துவிட்டுவந்தவர்'' [2, 62]
'' கைவேல் — எறிகின்றவேல் — இறகுள்ள அம்பு — இல்லாத அம்பு — வாள் — தண்டு — சக்கரம் — இவற்றிற்கு மேலே தெய்வப் படைகளிலும் கைவைக்கிற சமயம். '' [2 : 64]

அவர்தான் சொன்னர் ;

'அண்ணு,

இன்று கலியுகம் 1ஆம் தேதி என்று [9: 130]
'சபையிற் குதூகலம்' [2, 4]

வாக்கியத்திலே எந்தச் சொல்லைப் போட்டால் அது கருத்தைத் தாக்கமாகச் சொல்லும் என்பதைப் பண்டிதமணி தெரிந்திருந்தார். அந்தச் சொல்லில்லாவிட்டால், அந்த வாக்கியம் அவர் நினைத்த கருத்தைக் கேட்போருக்குக் கொடுக்காது. இலக்கியச் சொற்கள் கையாளுகின்ற இடத்தின் பொருத்தத்தினலே, அபாரசத்தியை வெளிப்படுத்தும்.

'' பொறுத்த இடங்களில் '' [2, 75]

இந்தப்பொறுத்த இடத்தை அப்படியே கைகழுவிவிட்டு [2,75] பொறுத்தல் என்பது பாரந் தாங்குதல், பொறுமையாயிருத்தல் என்ற கருத்துக்களையுடைய இலக்கியச் சொல், மிகப் பிரதான திருப்புமுனையாயிருக்கிற இடம் என்ற கருத்தில் பிரயோகிக்கிறர். 'அவன் ஒரு பொறுத்த சமக்காரன்' என்ற சாதாரண வழக்கையும் நோக்குக.

வியாக்கியானம் திரை எறிகின்றது. [2, 86]
திரை என்பது இங்கு அலையென்ற கருத்துடைய இலக்கியச் சொல். பொன்னம்பலபிள்ளையின் பிரசங்கத்தைக் கடலாகக் காணுதற்கு திரையென்ற சொல் செய்யும் தாக்கத்தைக் காண்க.

'' இந்த உயிர் துடிக்கிற பாட்டு '' [2, 96]

'' இந்த உயிர்ப் பாடலின் கருத்து '' [2, 96]

உயிரென்ற சொல் பாடலுக்குப் பிரயோகிக்கப்படும்பொழுது பாடல் உணர்வூட்டக்கூடியதென்பது விளங்குகின்றது.

"இந்தப் பெரிய சபையிலே, அரசருக்கும் அவர் தம்பிக்கும் பக்கத்திலே நின்று சேட்டை செய்கின்ற வஸ்து காடுகளிலே மரந்தடிகளிலே வாழ்க்கை நடத்த வேண்டியதேயாம்." 'வஸ்து' என்றது வடமொழி; அதனை மனிதனுக்குப் பிரயோகித்து அவனை உயிருள்ள அஃறிணைப் பொருளுமாக்காமல் அதிலும் கீழான சடப்பொருளாக மதிப்பதற்காகப் பிரயோகஞ் செய்துள்ளார். தொடர்ந்தும், அந்த வஸ்து இங்கே நிற்பதில் நூதனமில்லை என்று பிரயோகிக்கிறார்.

"அவன்... சோற்றோடு யுத்தஞ் செய்து கொண்டிருந்தான்" [2, 37]

அளவுக்கு மீறி அவசரமாக உண்பது என்பதை 'யுத்தம்'

என்ற சொல்லைப் பிரயோகித்து வெளிப்படுத்தியுள்ளார்.

"பொருளதிகாரம் என்றொரு பண்டம்" [6, 114]

'பண்டம்' என்ற சொல் பொருளதிகாரத்துக்குப் பிரயோகிக்கும் போது அதன் தாக்கத்தை நோக்குக.

எண்ணங்களின் தொடர்ச்சி எங்கே நிறுத்தப்பட வேண்டும்; எங்கே ஒன்றாகச் சேர வேண்டும் என்பதை நிதானித்தே அவருடைய வாக்கியங்கள் சிறுத்தும் பெருத்தும் வரும். சிக்கலான விடயங்கள் சிறிது சிறிதாக விளங்கிப் போக வேண்டுமென்றால், நீண்ட வாக்கியம் செய்வதில்லை. எண்ணம் தறிக்கப்பட்டால் அதன் முழுமை மாறுமென்ற விடத்தில் நீண்ட வாக்கியம் ஏற்ற பெயரெச்ச வினையெச்சங்களோடும் குறியீடுகளோடும் வரும்.

கம்பர் வள்ளுவர் கண்ட வீரசிகரமான அமிர்ததாரையில் ஈடுபாடுற்று, அந்த வீரதீர அமிர்த தாரையை ஒரு சற்பாத்திரத்தில் ஏந்தி எடுத்து வெகுபக்குவஞ் செய்து, அந்த உண்மையை ஒரு அமிர்த சஞ்சீவியாக்கி இந்த உலகுக்கு வழங்கியிருக்கிறார். [2: 104]

வாக்கியங்களில் தம்முடைய சொற்களோடு கவிதையின் வரிகளை அப்படியே பொருத்தி எழுதுகிறார்.

"விபீஷணன் இராக்கதனேயினும் இளமை தொட்டே ஊனைக் காவல் கைவிட்டு பல உடல் நன்னர் நெஞ்சத்திலே உயிரை யோம்பி வாழ்ந்து வந்தான்.

" பொருளதிகாரம் உளதாயின் மால்வரைபுரையும் மாடக் கூட லாலவாயிற் பால்புரை பசுங்கதிர்க் குழவித் திங்களைக் குறுங்கண்ணி யாகவுடைய அழலவிர்சோதி யருமறைக் கடவுள் அன்பினைந்திணைக் களவியலருளக் காரணமென்ன எனக் கடாவித் தலை குனியச் செய்து விடுவார்கள்.

சென்னைச் சிவன் அடியார்களைக் காணப் பேரவாக்கொண்டு சுழ ............................................... [6, 175]

தாம் பேசுகின்ற பொழுது எவ்வாறு பேசுவாரோ அவ்வா றுன ஒரு முறையை அவர், குறியீட்டுப யோகத்திலும் கையாண் டுள்ளார். பொதுவான ஒரு சீரைக் காண்பது கடினமாயிருக் கிறது. அது ஒரு தனிமுறை. வரிகளை அச்சிடும் போது, தனிச் சொற்கள் குறியீடு பெற்று ஒரு வரியில் நிற்க, அடுத்த வரியில் ஒரு சொற்றொடர் வர, அடுத்துக் கீழே வாக்கியம் முடியும். இதனுல், என்ன முறையில் பந்திபிரிக்கப்படுகின்றதென்பதை அவ ருடைய பேச்சின் நிறுத்தங்களைச் கொண்டே தீர்மானிக்கலாம். கண்டபடி குறியீடுகளையும், பந்தி பிரிப்பையும் பிரயோகித்துள் ளார் என்று சொல்லவே தோன்றும். அவருடைய சிந்தனை வழி யாகச் சொற்கூட்டம் அமையும் பேச்சு நடைக்கேற்பவே குறி களையும் பந்தி பிரிப்பையும் கைக்கொண்டுள்ளார் போலத் தெரி கிறது.

ஒரு தெரியாத சொல்லுக்குப் பொருள் சொல்லும் போது நேர்கோட்டுக் குறியீட்டைப் பிரயோகிப்பவர், வெவ்வேருன கருத்துடைய சொற்களை அடுக்கும்போதும் பிரயோகிக்கிருர்.

கைவேல் — எறிகின்றவேல் — சிறகுள்ள அம்பு — இல்லாத அம்பு — வாள் — தண்டு — இவற்றிற்கு மேலே தெய்வப் படை களிலும் கைவைக்கின்ற சமயம் [2 : 64]

எழுவாயை முதல்வரியிலும், ஏனைய பகுதியை அடுத்த வரி யிலும் பதிப்பித்துள்ளார்.

மாதே — என்மகளே !

நீயும் அந்தச் சோதியையணுகு ; அள்ளிப் பருகு ; அது ஊர்ப் பொது, அந்தச் சோதியிலே — நீ மயங்கு.

நேர்கோட்டுக் குறியீடு: மாதே — என்மகளே என்பதற்கிடையி லும் அந்தச் சோதியிலே — நீமயங்கு என்பதற்கிடையிலும் வெவ் வேருன பிரயோகங்கள் [6 : 2]

ஏழு இடைக் கன்னியர்கள் சுற்றி வளைந்து, முறையே
'குரல்'
'துத்தம்'
'கைக்கிளை'
'உழை'
'இளி'
'விளரி'
'தாரம்' [1 : 19]

என்னும் பெயர்களைத் தமக்கு இட்டுக் கொள்கின்றனர்கள். இந்த ஏழு சொற்களும் ஏழு வரிகளாய்ப் பதிப்பித்துள்ளதன் நோக்கமென்ன, ஒரே வரியில் கால்மாத்திரையிட்டுப் பதிப்பிக்க முடியாதா என்று தோன்றும். ஏழு சுரங்களின் சுருதி பேதம், ஏற்றத் தாழ்வுடையன என்பதைக் காட்ட இவ்வாறு செய்துள்ளார். அவர் பேசும் போது அவ்வகையாகக் குரலை எடுத்தும் படுத்தும் கூறுவார். இவ்வாறு, அநேக உதாரணங்கள் காட்டலாம்.

தமிழிற் புணர்ச்சி முறை மிக முக்கியமானது. தமிழ் ஒரு குறியீடில்லாத மொழி. பின்னரே குறியீடு புகுத்தப்பட்டது. வடமொழியில் புணர்ச்சி ஒலியடிப்படையில் உள்ளது. தமிழில் கருத்து வேறுபாட்டைக் கொண்டது. இதனை நாம் மிகவும் வற்புறுத்துகிறோம்.

இலங்கை சர்வகலாசாலை என்றெழுதுவதற்கும் இலங்கைச் சர்வகலாசாலை என்பதற்கும் பொருள் வித்தியாசம். முன்னையது இலங்கையே ஒரு சர்வ கலாசாலை என்ற கருத்தைக் கொடுக்கும். பின்னையது, இலங்கையிலுள்ள சர்வகலாசாலை என்ற கருத்தைக் கொடுக்கும்,

'நான் வண்டிக்குக் காத்துக் கொண்டு இருந்தேன்' என்று கொண்டு இருந்தேன் என்று பிரித்தெழுதினால், வண்டிக்காக எங்கேயோ ஒரு இடத்தில் உட்கார்ந்தேன் என்றுதான் பொருள்.

நான் வண்டிக்குக் காத்துக் கொண்டிருந்தேன் எனப் புணர்த்தி எழுதினால், நான் காத்துக் கொண்டிருப்பதாகிய தொழில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குத் தொடர்ந்து கொண்டிருந்தது என்பதுதான் பொருள்.

பண்டிதமணி ஒன்றாகக் கூற வேண்டியவற்றைப் புணர்ச்சி கொடுத்தும், நிறுத்தி அழுத்தம் கொடுக்க வேண்டுமென்ற இடத்தில் பிரித்தும் எழுதியுள்ளார்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தைக் கண்டு பிடித்துத் தமிழ் தந்த தாமோதரம்பிள்ளை யாயினர். [1, xiii]

IV

பண்டிதமணியின் மனக்கோலங்களை அவருடைய வாக்கியங்களிலே காட்டுவது எனது குறிக்கோள்களிலொன்று. அவற்றை நிரலிடமுன் அந்தக்காலத்துத் திருநெல்வேலிச் சூழ்நிலையை மிகச் சுருக்கமாகத் தந்தாற்றான், அவருடைய மனக்கோலங்கள் விளங்கும்.

இப்பொழுது யாழ்ப்பாணச் சர்வகலாசாலையாயிருப்பது அன்றேயொரு சர்வகலாசாலையாயிருந்த தென்றொரு மனப்படம் எனக் கிருக்கின்றது. அங்கிருந்த ஆசிரியர்கள் தங்கள் துறைகளிலே மகாமேதைகள்: இங்கிலாந்திலிருந்து அப்பொழுது தான் சிவபாதசுந்தரமவர்கள் வந்து ஆங்கில இலக்கியத்தை உயர் வகுப்புகளுக்கும் இலண்டன் சர்வகலாசாலைப் பட்ட வகுப்புகளுக்கும் கற்பித்துக் கொண்டிருக்கிறார். 'டாக்டர்' என்று அழைக்கப்படும் கு. சிவப்பிரகாசம் உளவியலில் இலண்டன் பல்கலைக்கழகத்தில், ஏழாண்டுகள் முறையாக ஸ்பியர்மன், பேர்ட் என்பாரிடம் கற்று, டாக்டர் பட்டத்தோடு கற்பிக்க வந்திருக்கிறார். அளவெட்டி ச. சிதம்பரப்பிள்ளை B. A. B.sc கணிதமும், விஞ்ஞானமும், வடமொழியும் கற்பிக்கிறார். ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பதாமாண்டில், கதோட் கதிர் பரிசோதனையையும், வெவ்வேறு வாயுக்களடைத்த குழாய்களில் நிறமாலைகளையும் கண்ணாரக் கண்டு கற்கும் வாய்ப்புப் பெற்றிருந்தோம். ஐம்பத்து மூன்று வருடங்களுக்கு முன்னே முத்துக்குமாரு M. A. அதிபர்; முத்துச்சாமிஐயர் கணிதவிற்பன்னர்; நவநீதகிருட்டினபாரதி தமிழாசான்; வியாகரணமகோபாத்தியாயர் வடமொழியாசிரியர். இப்படியே அடுக்கிக் கொண்டு போனால் நீளும்.

அங்குதான் ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தேழாமாண்டளவில் ஒரு தமிழ்ப்பண்டிதாசிரிய கலாசாலையை சு. நடேசபிள்ளையவர்கள் ஆரம்பித்தார். ஏனைய ஆசிரிய கலாசாலைக்கு இரண்டு வருடப்பயிற்சி; இங்கு மூன்று வருடப்பயிற்சி. இங்கு சேர்பவர்கள் யாழ்ப்பாணப் பண்டித வகுப்போ மதுரைத் தமிழ்ப் பண்டித வகுப்போ சித்தி பெற்று, அதோடு இலக்கண இலக்கியங் கற்பித்தலில் விசேட பயிற்சி பெறவேண்டும். விஞ்ஞானம், கணிதம், சரித்திரம், பூமிசாத்திரமாகிய பொதுப்பாடங்களிலும் சித்திபெறுதல் வேண்டும். இதற்குத் தமிழ் கற்பிப்பதற்கு

வித்துவான் கார்த்திகேயபிள்ளையவர்களும் நவநீதகிருட்டிணபாரதியவர்களும் தமிழாசிரியர்கள். உளவியல், விஞ்ஞானம் கற்பிக்க டொக்டர் சிவப்பிரகாசமும், சிதம்பரப்பிள்ளையுமிருந்தார்கள்.

அப்பொழுது திருநெல்வேலி ஆசிரியகலாசாலையில் சுவாமிநாதனவர்கள், கைலாசபதியவர்கள், பண்டிதர் கணபதிப்பிள்ளையவர்கள் ஆசிரியர்களாயிருந்தார்கள். இந்துபோட் என்று அழைக்கப்படும் இராசரத்தினம் அவர்கள் அதற்கு மனேஜராயிருந்தார். அவருக்கும், அதிபராயிருந்த சுவாமிநாதனுக்குமிடையில் தகராறெழுந்தது. இராசரத்தினம் கல்வித்திணைக்களத்துக்குச் சுவாமிநாதனைப்பற்றி எழுதும் கடிதங்களுக்கு மறுமொழியெழுத டொக்டர் சிவப்பிரகாசத்திடம் சுவாமிநாதன் வருவது வழக்கம் சுவாமிநாதனவர்கள் எழுதும் கடிதங்களை ஆங்கில இலக்கியத்திற் சேர்க்கலாமென்று அப்பொழுது கொழும்பு அதிகாரிகள் சொன்னதுமுண்டு. அநேகமாக மாலையில் சுவாமிநாதனை டொக்டர் சிவப்பிரகாசத்தின் வில்லுமண்டப விருந்தையில் காணலாம். இராசரத்தினம் சுவாமிநாதன் மோதலில், பண்டிதமணி இராசரத்தினத்தின் பக்கமாயிருந்தார். சிலகாலமாக நடந்த இந்தத் தகராறில் சுவாமிநாதனைப் பதவிநீக்கம் செய்யவிருந்த இராசரத்தினமே மனேஜர் வேலையை யிழந்தார்.

பண்டிதமணி நவபாரதம் என்ற பெயரில் 1937ஆம் ஆண்டு ஈழகேசரி ஆண்டு மடலில் ஒரு உருவகக்கதை எழுதினார். அதில் டொக்டர் சிவப்பிரகாசத்தைச் சகுனியாகப் பாத்திரம் கொடுத்திருந்தார். பின்னர், சிவப்பிரகாசம் அதிபராயிருந்த பண்டிதாசிரியகலாசாலை ஆசிரியமாணவர்கள் ஒருவருமே, யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கப் பரீட்சையில் தேருமல் எல்லாரும் தோல்வி கண்டு மூன்ருண்டுக் கல்வியும் விரயமாயிற்று. பண்டிதபரீட்சையிற் படுகொலை என்ெருரு நையாண்டிப் பாத்திரமும் வெளிவந்தது. இதனைச் செய்தவர்களைக் கண்டுபிடிப்பதிற் சிரமமிருக்கவில்லை. ஆனல் அந்த மாணவர்களுடைய அதே விடைப்பத்திரங்களைப் பார்வையிட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் பலரைச் சித்தி பெற்றவர்களாக வெளியிட்டார்கள்.

இந்தச் சம்பவத்தைச் சூசகமாகக் கனகசெந்திநாதன் குறிப்பிட்டுள்ளார், [5,20]

''பரமேஸ்வராவில் பண்டித கலாசாலை தொடங்கியபொழுது எஸ். எஸ். சி. சித்தியடைந்த பண்டித வர்க்கத்துக்கு விடிவுகாலம் வந்துவிட்டது. உண்மையாகவே அது நன்மையை விளைவிக்க

வேண்டும் என்று அவர் நினைத்தார். ஆனால், அது வெறும் ஆசிரிய பயிற்சியோடு பண்டித தராதரத்தையும் சேர்த்து (மூன்று வருடத்துள்) கொடுத்ததைக் கண்டு மனம் வெதும்பினார். கண்டனங்கள் தொடுத்தார். அப்போது அவரைப் படித்த உலகம் தூற்றவே செய்தது.''

சுசீந்திரராசா அவர்கள் [8] அதிபர் சுவாமிநாதனைப் பற்றி, ஏன் கனகசெந்திநாதன் ஒன்றும் குறிப்பிடவில்லை என்று ஆச்சரியப்படுகிறார். அதற்குக் காரணம் இப்பொழுது விளங்குமென எண்ணுகிறேன். மேலும் பண்டிதமணி சுவாமிநாதனைப் பற்றி எழுதும்பொழுது 'ஊடியும் கூடியும்' என்றெழுதும்போது 'ஊடியும்' என்பதற்கு மேற்படி பின்னணிச் சம்பவமே கருத்துக் கொடுக்கும்.

இப்பொழுது, இந்திய பண்டித வித்துவான், தமிழறிஞர் பற்றிப் பண்டிதமணியவர்கள் தமது மனக் கோலங்களை வெளிப்படுத்தும் கூற்றுக்களை நிரைப்படுத்துகிறேன். விருப்பு வெறுப்புக்களை வெளியிடுவதில் கூற்றுக்களை உணர்வாழத்தின்படி ஒரு ஐந்தளவுக் கோட்டில் மதிப்பிடலாம்.

''டாக்டர் உ. வே. சா. ஐயர் அவர்களில் ஏன் இந்தத் துவேஷம்'' [6:91] அடுத்த பிறவி ஐயாவுக்குச் சமணத்தில் என்பது ஸ்ரீமத் த.கைலாசபிள்ளை அவர்களின் ஹாஸ்யம்.

ஐயர் அவர்களின் கால்கள் யாழ்ப்பாணத்தைத் தீண்டாத போதும் என் தாபம் அடங்கவில்லை. [6:92]

சிந்தாமணியையோ ஐயர் அவர்களையோ தீர்த்துக்கட்டப் போகிறேன். [6:94] அவரை ஆதரிப்பதற்கு, முதற் சந்நிதானம்... ஐயர் மணக்க விடவில்லை. [6:96]

நாவலர் பாயிரத்தால் பிள்ளை ஆதீனவித்துவானாயினார் [6,96]

ஐயோ! ஐயர் வாள் மரணம் எவ்வாறும் [6:97]

அதனை [சீவகசிந்தாமணியை] 'மதனூல்' என்று திருத்துவது பொருத்தம் [6,106]

சிந்தாமணி பொய்யேகட்டிய சிந்தாமணியாயிற்று [6:106]

அன்றுதொட்டே ஐயரவர்களின் வாழ்க்கை, சிந்தாமணிக்கே அர்ப்பணமாயிற்று. [6:108]

ஐயரவர்களின் முத்தான பதிப்புக்கள் மூன்று: ஒன்று சீவகசிந்தாமணி. மற்றையவை சிலப்பதிகாரம், மணிமேகலை... அவையும் ஈண்டு இனம்பற்றி ஒருவாறு சிந்தித்தற்குரியவாம். [6:109] சிலப்பதிகாரத்துக்கு உள்ளீடான மணி ஒன்றுமேயில்லை [6: 111]

அவர் (டாக்டர் சாமிநாதையர்) வரமாட்டார் என்று பல்லி சொன்னேன்... 'யேன்' என்று என்மேற் பாய்ந்தார் பிள்ளை (சு. நடேசபிள்ளை) [6:93]

தலைவர் [ரா. பி. சேதுப்பிள்ளை] என் விஷயத்தில் 'கூனி' யாயிருந்தார். [6:93]

இளங்கோ பாத்திரமூலம் வெளியிடும் உணர்ச்சியாகிய உரிமை பற்றிச் சிந்தித்ததாகத் தெரியவில்லை. உயிரை வைத்துக் கொண்டே உடம்பைத் தேடியதாகத் தோன்றவில்லை. [6:138]

தமக்கிணையில்லா நாவலர் அவர்களைக்கொண்டு பரிசோதிப்பித்தேன் என்று பிள்ளை குறிப்பிட்டிருந்தார். [6:160]

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அக் கல்லூரி ஆசிரியராயிருந்தது இலக்கணக் கொட்டருக்குப் பிறகு ஆகலாம். [6:163]

மறைமலையடிகள், சோமசுந்தரநாயகரின் மாணவர். சோமசுந்தரக் காஞ்சியில் ஆனந்தக்குற்றங் கூறினார். அதனாற் பிள்ளையில் அடிகளுக்குச் சற்றே வெறுப்பு [6:171]

இராமலிங்கர் அற்புதஞ் செய்ய முயன்று தோற்றுவிட்டார்[6]

இவ் வழக்கிற் சாட்சியம் சொன்ன முக்கியஸ்தர்கள் மூவர். [6:174]

ஒருவர் டாக்டர் உ. வே. சாமிநதையரவர்கள். [6: 174]

டாக்டர் உ. வே. சாமிநாதையர் கதைகளைச் சொல்லி முடிக்கிறமாதிரி முடிக்கிறதற்காக நானும் எனக்கிந்தக் கதைவந்த கதையைச் சொல்லியிருக்கிறேன். [2:157]

சென்னைச் சர்வகலாசாலை முக்கியஸ்தர்களான வையாபுரிப் பிள்ளை முதலியவர்கள் மற்றொருவர் சேனாவரையம் பதிப்பித்தார் என்றுதாம் அறியவில்லை என்கிறார்கள். [2:33]

சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் பலமுறை தூண்டினமையால் விரைந்து அச்சிடுவிக்கத் துணிந்தேன். வே. சாமிநாதையன் [2: 139]

புறச்சமயம் என்று கழிக்கும் ஏகாத்மவாத மடங்களும் *[10: 88]*

மடங்கள் மாணிக்கசுவாமிகளேச், சம்பந்தப் பெருமானைத், திருநாவுக்கரசு மூர்த்தியை, சந்தான குரவரை மெல்ல மெல்ல மறக்கின்றன.

இங்கே பத்துக் கூற்றுக்கள் சாமிநாதஐயரிலுள்ள வெறுப்பைக் காட்டுவன. இவற்றில் ஐயரவர்கள் கால்கள் யாழ்ப்பாணத்தைத் தீண்டாதபோதும் தாபம் அடங்கவில்லை யென்பது மிக உயர்ந்த அளவில் வெறுப்பைக் காட்டும் கூற்று.

ஒரு பொருளில் உள்ள வெறுப்பு அதனோடு தொடர்புபட்ட ஏனைய தொடர்புகளிலும் தாவுவதை உளவியலில் இரண்டாம் வலுவூட்டல் (Secondary Reinforcement) என்று கூறுவார்கள். அதன்படி ஐயர் பதிப்பித்த சீவகசிந்தாமணியிலும் வெறுப்புத் தாவுகின்றது. அன்றியும் அவர் பதிப்பித்த மணிமேகலை, சிலப்பதிகாரம் என்பவற்றையும் எட்டுகின்றது அந்த வெறுப்பு. இங்கு குறிக்கப்பட்ட நூல்களிலும் வெவ்வேறு காரணங்களுக்காகவும் வெறுப்பிருக்கலாம். ஆனல் ஐயரவர்கள் பதிப்பித்த முத்தான பதிப்புக்கள் மூன்று என்று தொடங்கிச் சிலப்பதிகாரம் மணிமேகலையாகியவற்றையும் சிந்தாமணியோடு சேர்த்துத் தள்ளப்படவேண்டிய நூல்கள் என்கிறுர். அன்றியும் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்ற பாரதிக்கும் அந்த வெறுப்புப் பரவுகிறது. காப்பியங்களில் வெறுப்புக்கொண்டமைக்கு அவருடைய இலக்கியக் கோட்பாடு முக்கிய காரணமென்பதை இலக்கியக் கோட்பாடு பற்றிச் சொல்லும்போது காட்டலாம்.

பண்டிதமணி மறைமலையடிகள் வையாபுரிப் பிள்ளையவர்களிலும் நல்ல மனக்கோலம்கொண்டிருக்கவில்லை என்பதற்கும் கூற்றுக்களை மேலே காணலாம். இராமலிங்க சுவாமிகளிற் பொல்லாத வெறுப்பு. சு. நடேசபிள்ளையவர்களில், சீவகசிந்தாமணியை ஐயர் பதிப்பித்ததற்குப் பாராட்டியதற்கும், அதற்காகப் பாராட்டுப் பெற்றதற்கும் சீற்றமுண்டு. தமது ஆசிரியரையும் அவரின் முந்திய பரம்பரையினரையும், இழித்தவர்கள் எதிர்த்தவர்களில் வெறுப்புக்கொண்டது அவர் குருபக்தியையும், ஈழத்துச் சான்றேரிவிருந்த அபிமானத்தையும் காட்டுகின்றது. மேலும் ஈழமண்டலம் இயற்கை வளத்திலோ இலக்கிய வளத்திலோ தென் இந்தியாவுக்கு எட்டுணையும் குறைந்ததல்லவென்பது அவர் கொண்ட எண்ணம்.

தென்னகத்தே போற்றத்தக்க சான்ருேரொருவரிருந்தால், அதற்கு இணையாக அல்லது மேலாக ஒருவர் ஈழத்திலுள்ளார் என்று காட்டுவதும் அதை நிலைநாட்டுவதும் அவர் எடுத்த முக்கிய பணிகளிலொன்று.

நாவலருக்கு இணையானவர் தென்னகத்தில் யாருமில்லை. திருவாவடுதுறை மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளைக்கு எட்டுணையும் குறையாதவர் வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளையவர்கள். சாமிநாதையர் பதிப்பு முயற்சியிலும் பாண்டித்தியத்திலும் தாமோதரம்பிள்ளையை எட்டிப் பிடிக்கவும் மாட்டார். சுன்னுகம் குமாரசுவாமிப் புலவருக்கு இணையாகக் கூறக்கூடியவர் தென்னகத்தில் இல்லை. சோழமண்டல சதகமிருந்தால், குற்ருலக் குறவஞ்சியிருந்தால் இங்கே ஈழமண்டல சதகமுண்டு; பருளாய் விநாயகர் பள்ளுண்டு. அங்கே விகடனில் கம்பராமாயணத்தைச் சுவை சொட்டச்சொல்ல, பி, ஸ்ரீ. ஆசார்யா இருந்தால், இங்கே தினகரனில் கம்பராமாயணக்காட்சிகளைச் சுவை சொட்டச் சொட்டச் சொல்ல நானிருக்கிறேன். அங்கே டி. கே. சி. இருந்தால், இங்கே கனகசெந்திநாதனிருக்கிருன். அங்கே தேசிகவிநாயகம் பிள்ளையைப் பெரிய புலவராக்க டி. கே. சி. யிருந்தால். சோமசுந்தரப்புலவரைப் பெரிய புலவராகக் காட்ட நானும் கனக செந்திநாதனுமிருக்கிருேம். இப்படியாகத் தென்னகத்தில் உள்ளவருக்கு இணையாக அல்லது மேலாக ஈழத்தில் தமிழ் விற்பன்னரும் புலவருமிருக்கிருர்கள் என்று காட்ட அவர் பணிசெய்துள்ளார்.

சோமசுந்தரப் புலவரைப் பெரும் புலவராக வெளிக்கொணர்ந்தது பண்டிதமணியே. கத்தரித் தோட்டத்து வெருளிக்கும், ஆடிப்பிறப்புக்கும், தாரமாய்த் தாயானுள்கை என்பதற்கும் பண்டிதமணி எழுதிய இரசனையுரையின் பிறகுதான் சோமசுந்தரப் புலவரை, பெரிய புலவராக உலகம் கண்டது. ஒருமுறை நான் அவரைக் கண்டபொழுது, " நான் சும்மா பிடித்துவிடப் பட்டம் மேல் காற்றிலல்லவோ எழும்பி நிற்கிறது " என்று சோமசுந்தரப் புலவரின் எழுச்சியைப்பற்றிக் கூறினுர். சோமசுந்தரப் புலவரைத் ' தங்கத் தாத்தா ' என்று கூறி இலங்கை வளம் காட்டும் பாடலை ஒரு பிரயாண அநுபவமாக வாசகர்களை இரசிக்கச் செய்துள்ளார். மரதனஞ்சலோட்டப் போட்டிக்கு டி. எஸ். செனநாயக்கா பிரதமராயிருந்தபொழுது, சோமசுந்தரப் புலவரும் கவிதையனுப்பியவர் என்பதை அவர் மகன் வாயிலாக நான் தெரிந்துகொண்டேன். அந்தப் போட்டியில் சோம

சுந்தரப் புலவரின் கவிதை முதலாமிடத்தைப் பெறவில்லை. முது பெரும் புலவர் நல்லதம்பியவர்கள் கவிதையே முதலாமிடத்தைப் பெற்றது; அது முதலாம் பரிசையும் பெற்றது. சோமசுந்தரப் புலவரின் நிலை என்ன என்பது தெரியவில்லை. இது பற்றிப் புலவரின் மகன் இளமுருகனார் ஆத்திரமடைந்ததை யறிவேன். ஆனால், சோமசுந்தரப் புலவரின் இலங்கை வளம் வெளியாயிற்று. அது மரதனோட்டப் போட்டியிற் சமர்ப்பித்த ஒரு பாகமோ வேறோ தெரியாது. ஆனால் பண்டிதமணி இரசனையுரை எழுதியுள்ளார். இதை ஏன் கூறினேனென்றால், பண்டிதமணி பரிசு பெற்றவரின் கவிதையைப்பற்றி ஒரு வரியேனும் எழுதியதாக எனக்கு எட்டவில்லையென்பதனாலேயே. கைவைத்ததைக் கனகமாக்கும் மந்திரவாதி பண்டிதமணி என்பதைச் சொல்லவே இதனைக் குறிப்பிடுகிறேன்.

பண்டிதமணி ஈழநாட்டுப் புலவர் பலரை அறிமுகஞ் செய்துள்ளார். அவர்களுடைய கவிதைகளுக்கு நல்ல இரசனையுரைகள் வரைந்துள்ளார். நடேசபிள்ளையவர்கள் **சகுந்தலை வெண்பா** என்று ஒரு அருமையான கவிதை நூல் எழுதியுள்ளார். நவநீதகிருட்டிண பாரதியார் எழுதிய **காந்தி வெண்பா, செழுங்கதிர்ச் செல்வம்** என்பனவற்றைக் கேள்விப்படாதவர் தேடி ஒரு முறை படித்துப் பார்க்க வேண்டும். ஈழத்து இலக்கிய வளர்ச்சியை ஆராய்பவர்கள் அவற்றை ஒருதரம் புரட்டியாவது பார்க்கட்டும். இலக்கிய வளர்ச்சியின் ஒரு பாதி மறைந்துள்ளது; ஒரு பாதி மிதந்துள்ளது. இது இந்தச் சந்ததிக்குத் தெரியாது. அவர்கள் மிதந்த ஒரு பாதியையே காணுகிறார்கள். புதைந்து போனவர்களைப் பற்றி எண்ணும் போது, ஒரு வரி மனத்துக்கு வருகின்றது. மணிகள் அலையின் மேல் மிதப்பதில்லை என்பது தான் அது.

**பண்டிதமணியின் இலக்கியக் கோட்பாடு :**

பண்டிதமணியின் இலக்கியக் கோட்பாடு பற்றி அவருடைய கூற்றுக்களை முதலில் நிரைப்படுத்துகிறேன்.

இலக்கியமென்றால் உரியாகிய மெய்ப்பொருளை உயிராகக் கொண்டது. *[ 6: 143 ]*

இலக்கியங்களுக்கும் கவிதைகளுக்கும் உரிப் பொருளே உயிரான பொருள்; சிறந்த பொருள். கரு — உடல். *[ 2: 154 ]*
திருக்கோவையார் நுதலிய பொருள் அன்புக் கூட்டம். *[ 6: 124 ]*
களவு என்றால் உலக பந்தங்களிலிருந்து கொண்டே தெய்வமென்பதோர் சித்தமுண்டாதல் *[ 6: 128 ]*

புறமென்றதனாலே தள்ளத் தக்கதன்று; அகத்திற்கு உபகாரமானது. அகங்கைக்குப் புறங்கை போலே [6: 128]

கண்ணகியைக் கம்பர் கண் பாரார்; சேக்கிழாரும் சேரார். அப்படியானால் அவள்கதியென்ன. [6: 136]

புலவர் முகந்து கொண்ட ஒரு உணர்ச்சி உரி - உயர்ந்ததாய் உலக பாத்திரங்களில் வைத்தெண்ணக் கூடாத மிக்க பரிசுத்தமானதாகலாம். அப்படிப்பட்ட தலைவன் X, அப்பன். Y அம்மை அகனைந்திணை சுட்டி ஒருவர்ப் பெறுஅர். [6: 138]

சிலப்பதிகாரத்தில் இளங்கோவினது பாஷாலங்காரத்தைப் பாராட்டுகின்றோம். சிலப்பதிகாரம் ஒரு மாதவி; பாஷாலங்காரத்தில் தன்னிகரில்லாதது. இதில் மயங்கிய கோவலர் பலர். பாரதியாரும் ஒருவர் ஆகலாம். [6: 142]

பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணி சீவக சிந்தாமணி. [6: 132] இலக்கியத்திலே பாத்திரத்தை நோக்கும் போது வேறெதனையும் நோக்கலாகாது. கவிஞனை மறக்க வேண்டும், சற்றுப் பொறுத்துத்தான் அவனை வியக்க வேண்டும்.

சொல் - சந்தம் - ஓசை ஆகிய மூன்றும் கருத்தின் தூலமான வெளிப்பாடுகள். அதனால், இலக்கியத்தின் தூலமான உடல்; சூக்கும உடல் கரு.
முல்லையென்றால் பரிபூரண கற்பு [1: 22]

இறைவனோடு இரண்டறக் கலத்தலாகிய வீடுபேற்றுக்குக் கருவியாயிருப்பனவே இலக்கியம் என்பது பண்டிதமணியின் கோட்பாடு. சங்க இலக்கியங்கள், திருவாசகம், திருக்கோவையார், கந்தபுராணம், பெரியபுராணம், கம்பராமாயணம் என்பனவற்றை அந்தக் கோட்பாடாகிய உரைகல்லிலே வைத்துத்தான் உரைத்துப் பார்க்கிறார். அவை மாற்றுவிடாது தரமுள்ளனவாகின்றன. சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன அந்த உரைகல்லிலே இலக்கியத் தரத்தைப் பெறுகின்றில. இது தான் அவருடைய கூற்றுக்களிலிருந்து பெற்றது.

இலக்கிய விமரிசனம் என்ற ஒரு கலை புதிதாக வளருவதாகக் கூறுகிறார்கள். அவர்கள் மேலைத்தேயச் சிந்தனையில் உருவாக்கப்பட்ட சில கொள்கைகளைச் சட்டகங்களாக வைத்துக் கொண்டு, அந்தச் சட்டகங்களிலே தமிழிலக்கியங்கள் எவ்வாறு பொருந்துகின்றன என்பதை ஆராய்கிறார்கள். ஆனால், எழுதாத

தும், மரபுவழிப்பட்டதும், விமரிசனம் என்று பெயர் பெருதது மாகிய ஒரு இலக்கிய உரைகல் இருந்தது. நக்கீரன் தருமியின் பாட்டிற் குற்றங்கண்டது முதல் திருவள்ளுவமாலை வரை வந்து, சங்கப் பலகையில் அந்த விமரிசனக்கலை வளர்ந்தது. நூல்களின் உரைகள், விருத்திகள், மாற்றுரைகள் எல்லாம் மரபு வழிப் பட்ட விமரிசன அடிப்படையைத் தந்துள்ளன. பண்டிதமணி அப்படிப்பட்ட மரபு வழிப்பட்ட இலக்கியக் கோட்பாட்டினைப் பெற்றவர். சீவகசிந்தாமணி இலக்கியமன்று என்றது பண்டிதமணிக்கு முன்னுள்ளது; பெரியபுராண காலத்தது.

தொல்காப்பியத்தில் அன்பினைந்திணையும், அதற்குப்புறம் பாகிய புறத்திணையும், முதல் கரு உரி என்பனவும் அன்பு செய்தல் என்ற அடிப்படையில் எழுந்தவையென்று, சமய அடிப் படையில் தொல்காப்பியப் பொருளதிகாரத்தைக் காட்டுகிருர். அன்பினைந்திணையென்ற முழுநூலுமே அதற்காக அர்ப்பணிக்கப் பட்டது. குறிஞ்சியிலே புணர்தலாகிய கூடுதலும் அதைச் சார்ந்தவையும் வருகின்றன. திருமுருகாற்றுப்படையைக் குறிஞ் சியின் உரிப்பொருளாகக் காட்டி ஒவ்வொரு திணையையும் அன்பு செய்தலில் இணைக்கிருர். பாலையில், இன்னிழலின்மையால் வருந்திய மடப்பெடைக்குத் தன்னிழலைக் கொடுத்துதவும் மானைக் காட்டி பாலையிலும் அன்பு செய்தலைக் காட்டுகிருர். இரங்கல் என்னும் நெய்தலுக்குரிய உரியை மணிவாசகப் பெருமானின் திருவாசகத்தின் அடிநாதமாகக் காண்கிருர்.

அகத்திணைக்கேற்ற புறத்திணைகள் எவ்வாறு பொருந்துகின் றன என்பதைக் காட்டுகிருர். புறநானூற்றில் வரும் திணைகள் துறைகள் எல்லாம் அன்பொழுக்கத்துக்கு உதவுவன; ஒரு தங்க நாணயத்தின் இருமுகங்கள் என்பது அவர் கோட்பாட்டின்விரிவு.

சங்க நூல்களை, இலக்கிய வரலாறுகாரர் சிலர், சமூக வளர்ச் சியைக் காண்பதற்குரிய ஒரு தரவுப்புத்தகமாகவேநோக்குகிருர்கள். மக்கட் கூட்டம் பல்வேறு நிலவமைப்புக் கொண்ட விடங்களில் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்ற அடிப்படையில் ஐந்துநில வாழ்க் கையைக் கொள்கிருர்கள். அன்றைய சமூகவாழ்வை மீளவமைத் துப் பார்க்கும் தரவு நூலாகவும், மொழிக்குடும்பங்களை ஆராய் வதற்குரிய பதிவுப்புத்தகமாகவுமே இவர்கள் வேதத்தைப் பிர யோகிக்கிருர்கள். 'ஓம்' என்பது ஒரு கருத்தற்ற அசை என்று மாக்டொனல் என்னும் பேராசிரியர் எழுதியுள்ளார். வேதம் அவர்களுக்கு அச்சில் வாழுகிறது: நமக்கு வேதம் நாவில் வாழு கின்றது; செவியிற் சென்று மனதைப் பக்குவப்படுத்தும் தெய்

விக சக்தியுடையதாக உணர்கிறோம். அதனாற்றான் வேதத்தைச் சுருதி என்றார்கள். ஸ்ரூ-என்றால் கேள் என்பது பொருள். வேதம் நமக்கு ஆன்மீகப் பொருள்; மேலைத்தேசத்தவருக்கு ஒரு தரவு நூல். சங்க இலக்கியங்கள் பெயர் சுட்டிச் சொல்லொணாத அம்மையையும் அப்பனையும், அன்புக் கூட்டத்தையும் காட்டும்; திருவாசகம் அன்பு செய்தலிற் பிறந்தது; திருக்கோவையார் அன்பில் இணைவதைக் குறிப்பது என்ற கருத்துள்ள அடிப்படையைப் பண்டிதமணி இலக்கியக்கோட்பாடாகக் கொண்டார்.

சமணம் பௌத்தம் என்பன பற்று விடுதலைக்கோட்பாடாகக் கொண்டவை. இந்தப்பற்றுவிடுதல் இறைவனைக் கூடுதலில் முடியவில்லை. நிர்வாணமடைதல், பஞ்சகந்தங்கெடுதல் என்பன சூனியத்தில் முடிகின்றன.

இந்த அடிப்படையில் எழுந்த சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலையென்பன இலக்கியங்களாகா என்பது மரபுவழி ஆசிரியர்கள் கைமாறிக் கொடுக்கப் பண்டிதமணி பெற்றது. பாஷாலங்காரமும் வருணனை அழகுகளும் ஒரு இலக்கியத்தில் என்ன செய்யும், அவை ஒரு பேற்றையடையக் கருவியாகாவிட்டால் என்பது பண்டிதமணியின் கோட்பாடு. அதனாற்றான் சிலப்பதிகாரத்தை ஒரு மாதவியென்கிறார். பாஷாலங்காரத்தால் மயக்கவல்லது; ஆனால், அந்த மாயவலையில் விழக்கூடாது என்று எச்சரிக்கிறார்; நெஞ்சையள்ளுஞ் சிலப்பதிகாரம் என்று கூறிய பாரதியையும் மயங்கியவராக எண்ணுகிறார். கண்ணகி பாத்திரத்தையும் சீதையையும் ஒப்பிட்டுக் கண்ணகியை இலக்கிய பாத்திரமன்று என்று கூறுகிறார். ஆனால், அப்படிக் கூறுபவர் கண்ணகித் தெய்வத்துக்கு ஒரு நூலியியற்றியுள்ளார். ஒருவேளை, இந்நூல் இலக்கியக் கோட்பாடு பற்றிய சிந்தனை முதிருவதற்கு முன்பாடப்பட்டதாக விருக்கக்கூடும். இதுவே அவருடைய அச்சிடப்பட்ட நூல் வரிசையில் இளம்பருவத்திற் செய்யப்பட்டதாகக் காணப்படுகிறது. இது லோச் செல்லப்பா என்ற ஒருவரின் வேண்டுகோட்கிணங்க இயற்றியதாக அறிகின்றோம். அதனால், அவருடைய சுயமான உந்துதலிலிருந்து பிறக்கவில்லையென்று தெரிகிறது. அவ்வாறே அன்பினைந்திணை என்ற நூலிலும் நெய்தலுக்குச் சிலப்பதிகாரத்தில் வரும் 'மோதுமுதுதிரையால்' என்ற பாடலையும், முல்லைக்கு, 'கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்' என்ற பாடலையும் எடுத்தாண்டிருக்கிறார். இவை கதைக்குப் புறம்பான ஐந்திணைக் காட்சிகளைக் காட்டுவன. ஆதலால் அன்புக்கூட்டத்துக்குரியன என்ற கருத்தினைப் பண்டிதமணி கொண்டிருக்கலாம்.

கம்பராமாயணம் இறைவனைக் கூடுதல் என்னும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு இராமனை ஒரு தெய்வப்பாத்திரமா கவே கம்பர் படைத்திருக்கிறார். வள்ளுவர் காட்டும் அறநெறிக்கு எடுத்துக்காட்டாகக் கம்பனின் காவியபாத்திரங்கள் வனையப்பட் டிருக்கின்றன என்பதைக் காட்ட இராமாயணம் முழுவதிலும் பாத்திரங்களின் பண்புகள் வெளிப்படும் பல்வேறு சந்தர்ப்பங்க ளையும் காட்டியுள்ளார். அவற்றைப் பொறுத்த இடங்கள் என்று பண்டிதமணி மிகப் பொருத்தமான மொழியிற்றந்துள்ளார். அந் தந்த இடங்களில் அவற்றிற்கேற்ற குறள்களையும் விளக்கி வள்ளுவர் வாக்கினைப் பாத்திரக்குணத்தாற் கருத்துப்பெற வைக்கி றார். வள்ளுவரின் காமத்துப்பால் களவியல் கற்பியல் என்று பிரிவது, அன்பினைந்திணை என்னும் தொல்காப்பியப் பொருளதி காரக் கோட்பாடுகளுக்கமையவே என்பது அவர் கருத்து. முருக னின் வள்ளி தெய்வானையரை மருதநில ஊடலன் பின்னல் விளக்குகிறார். களவின் பின்வரும் கற்பொழுக்கத்தின் அடிப்படை யிலேயே காண்கிறார். அதனாலேயே, முல்லையென்றாற் பரிபூரண கற்பு என்று ஆணித்தரமாக விளக்குகிறார். பெரியபுராணத்திலும் இதே கோட்பாடு விரிந்திருப்பதைக் காட்டுகிறார். காரைக்காலம் மையாரை இத்தகைய ஒரு கோட்பாட்டின் அடிப்படையிலேயே காட்டுகிறார்.

தென்னகத்திலே ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் இராமாய ணத்தை விளக்கு முகமாகப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். பி. ஸ்ரீ. ஆசார்யா ஆனந்த விகடனில் கம்பராமாயணம் முழுவ தையுமே தொடராக விளக்கியுள்ளார்; டி. கே. சி. கம்பரின் இரா மாயணக் காட்சிகளை இரசனை தோன்ற விரித்திருக்கிறார். யாருமே கம்பராமாயணத்தைத் தொல்காப்பியம் வழிவந்த அன்பினைந் திணைக் கோட்பாட்டுக்கும் இறையனார் களவியல் சொன்ன பொருளதிகாரத்துக்கும், வள்ளுவர் கண்ட அறநெறிக்கு மூடே செல்கின்ற ஒரு தனியிழை என்ற கருத்திற் காணவில்லை. இதைத்தான் தமிழ் விழாவிலே தமிழ் நுதலிற்று என்று விரித் துரைக்க முயன்றிருக்கிறார்.

வெண்ணெய்க் கண்ணனார் என்னும் மாவிட்டபுரம் நவநீத கிருட்டினபாரதியார் திருவாசகத்துக்கு ஒரு விரிவுரை 1954ஆம் ஆண்டளவிலே எழுதினார். அந்த விரிவுரைக்கும் திருவாசகத்தின் வேறுரைகளுக்குமுள்ள வித்தியாசம் இதுதான். அன்பினைந்திணை என்ற அடிப்படையிலேயே அந்த விரிவுரை செல்லுகின்றது. திருவெம்பாவை, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பொன்

னூஞ்சல், திருக்கோத்தும்பி போன்ற எல்லாவற்றிலும் இழை யோடும் அன்பினைந்திணையைக் காட்டியுள்ளார். திருக்கோவையா ருக்கும் திருவாசகத்துக்குமுள்ள இயல்பை வெகு அழகாகக் காட்டியுள்ளார். அண்மையில் ஏழாலைப் பண்டிதர் கந்தையாவும் காரைநகர் மணிவாசகர் சபை மலரில் எழுதிய கட்டுரை இந்தக் கோட்பாடு மரபுவழி வந்ததென்பதைக் காட்டுகிறது. அவர் கூற்றுப் பின்வருமாறு: இதனுல் மேற்குறித்த சிந்தாமணித்துறவு சிலப்பதிகாரத்துறவு, மணிமேகலைத்துறவுகள் வள்ளுவர் நீதிப் பக்கந் தலைகாட்டவும் இயலாதநிலையுண்டு [11: 114] சிந்தா மணித்துறவு நரித்துறவு என்று ஒரே வார்த்தையிற் பண்டிதமணி கூறுவதை நோக்குக.

வான்மீகிதானே என்ற கட்டுரையில் வரும் இராமர் கைகேயி சம்பாஷணையில் வான்மீகி சொன்னதாகக் கூறப்படும் பகுதியை பண்டிதமணி எங்கேயிருந்து பெற்முர் என்பதை அறிய முடிய வில்லை. நூலிலும் அதற்குரிய குறிப்புக்களைக் காணவில்லை. அத ஞல் பண்டிதமணி வான்மீகியைப்பற்றிக் கொண்ட அபிப்பிரா யம்பற்றி அவரைக் குறை கூற முடியவில்லை. அவர் வான்மீகி சொன்னதைக் குறிப்பிட்ட இடத்தையும் மூல வடமொழி இரா மாயணத்தில் வால்மீகி கூறுவதையும் உங்கள்முன் சமர்ப்பிக்கி றேன்.

இராமன்: இது ஒன்றுதான் என் மனதை மிகவும் வருத்துகின் றது. என்னிடத்தில் நேராக என் தந்தையார் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைக்கவேண்டும் என்று ஏன் சொல் லக் கூடாது.

"எதற்காக அவர் தலைகுனிந்து தரையில் தாரையாகக் கண்ணீர் வடிக்கவேண்டும்?"

கைகேயி: தாமதிக்காமற் சீக்கிரங் காட்டுக்குப் போ. அரசர் வெட்கத்தினுல் உன்னிடத்தில் பேச மனமொழாமலிருக்கிறுர். இதற்கு வேறு காரணஞ் சிறிதுமில்லை.

இராமன்: "அம்மா, என்னைப் பொருளாசைகொண்டு உல கத்தில் வாழ்வதற்கு எண்ணங்கொண்டவனுக நீர் நினைக்கவேண் டாம். தருமம் என்பதையே எப்பொழுதும் கைப்பற்றியிருக் கின்ற என்னை ரிஷிக் கொப்பானவன் என்றெண்ணுவீர்"

"பரதனுக்கு அபிஷேகஞ்செய்ய வேண்டும் என்று அரசரிடத் திற் கூறினீர். ஆதலால் என்னிடத்திற் பண்புள்ளதாகக் கருத வில்லைப்போலும்"

[இராமன், தனது நண்பர்கள் துக்கப்பட்டுப் பிராணனை விட்டுவிடுவார்களோ என்ற அச்சத்தால் ஒருவிதமான விகாரத்தையும் அடையாதிருந்தான்.] [9: 29]

இது பண்டிதமணி எழுதியது. இனி வால்மீகி சொல்வது வருகிறது.

கைகேயி: அரசனால் வாக்குறுதி கொடுக்கப்பட்டது. உன்னால் முறிக்கப்படாததாயின், நான் சொல்லுவேன்; ஏனெனில் அரசர் ஒருபோதும் உனக்குச் சொல்லமாட்டார்.

கைகேயியாற் கூறப்பட்ட இந்த வசனங்களைக் கேட்ட இராமன், தவித்துக்கொண்டு அரசர் முன்னிலையில் கைகேயியை விளித்துக் கூறினான்.

ஓ! சி! இப்படிப்பட்ட வார்த்தைகளை அரசியே நீங்கள் எனக்குச் சொல்லக் கூடாது.

ஏனென்றால், அரசனாணையிட்டால் நெருப்பிலும் குதிப்பேன், கொடிய விஷத்தையுமுண்ணுவேன், சமுத்திரத்திலும் ஆழுவேன் கைகேயி: இந்த இராச்சியத்தை விட்டு தண்டகாரணிய வனத்தில் சடைமுடிதரித்து, மான் தோலுடுத்து ஏழும் ஏழும் என்ற கணக்குடைய வருடங்கள் வாழ்வாயாக, கோசல நாட்டிலிருந்து பரதன் இந்த அரசை ஆளட்டும். அரசருடைய சத்திய வாக்கை உண்மையுள்ள தாக்குவாய் ஓ! இரகுவமிசப்பேறே, மாந்தரிற் சிறந்தவனே இராமன் ஆனால், ஒரு மனச்சஞ்சலம் என்னை எரிப்பது போல் வாட்டுகிறது. அரசர் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதை எனக்குச் சொல்லவில்லை. கேட்காமலே, பரதனுக்காக, சீதையையும் ராஜ்யத்தையும் என்னுடைய உயர்ந்த வாழ்வையும் உடைமைகள் எல்லாவற்றையும் துறக்கிறேன். அதிலும், அரசனால் கட்டளையிடப்பட்டு உம்முடைய அபிலாஷையை நிறைவேற்றுகிறேன்.

இந்த சுகங்கள் நிரம்பிய உலகில் வாழ வேண்டுமென்று நான் விரும்பவில்லை. தருமத்தில் வேரூன்றியிருப்பவனாகிய நான் ரிஷிகளுக்குச் சமமானவன் என்று அறிந்துகொள். அரசன் கட்டளையை நிறைவேற்றுவதை விட உயர்ந்த கட்டளையொன்றில்லை. தந்தையைக் காக்கவும் அவருடைய சொல்லை நிறைவேற்றவும், மன்னனாற் சொல்லப்படாவிட்டாலும், உம்முடைய கட்டளைப்படி மக்களில்லாத காட்டிற் பதினான்கு வருடம் வசிக்

கிறேன். [ தந்தையையும் கைகேயியையும் சுற்றிவந்து உட்பிர காரத்திலிருந்து வெளியே வருகிறுன். அரசைத் துறந்தது, அவனுடைய இலட்சுமீகரத்தை குறைக்கவேயில்லை.

சைவ சித்தாந்தம் தமிழிலக்கியத்தினூடு செல்லும், உட் பொருளாக அமைகிறது. இது அவரது அத்வைதம் என்ற நூலில் காட்டப்படுகிறது. இதைப்பற்றி நானிங்கு பேச வரவில்லை. ஆனுல், இன்று சைவசித்தாந்தத்தை விளங்கிக்கொள்ள எத்தனையோ வகுப்புக்கள் அங்குமிங்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சைவமக்கள் அதனைப் படிக்க மிகவும் அங்கலாய்க்கிறுர்கள் என்பது தெரிகிறது. எவர் வாயிலிருந்தும் அதை, அறிய வேண்டும் என்ற அவா மேலோங்கி நிற்கிறது. சைவ சித்தாந்தத்தை விளங்கியவனென்ருலே அவனெரு அநுபூதிமான் என்றும் எண்ணுகிறுர்கள். சைவர்களுக்கு ஒரு தெய்விக நூல். அதனையொரு விவேகப் பயிற்சிக் கூடமாகவும், வரலாற்றுத் தரவு நூலாகவும் நோக்கி ஆராய்பவர்களுமுண்டு. பண்டிதமணி, சங்க இலக்கியம், தொல்காப்பியம், திருக்குறள், பெரியபுராணம், தேவார திருவாசகம் இவற்றிலிருந்து வடித்த தேனே சைவசித்தாந்தம் என்று கொண்டுள்ளார்.

## சுருக்கம்

பண்டிதமணி கவிதை கற்பித்தற்கலை கைவந்தவர். அவருடைய மனக்கோலங்களில் ஒன்று ஈழத்து இலக்கிய கருத்தாக்களும். தமிழறிஞர்களும் தென்னிந்தியத் தமிழறிஞர்களிலும் இலக்கிய கருத்தாக்களிலும் எக்காலத்திலும் தரமுயர்ந்தவர்கள் என்ற அடிப்படையிற் பிறந்தது. அவருடைய இலக்கியக் கோட்பாடு தொல்காப்பியப் பொருளதிகார அன்பினைந்திணையில் ஊற்றெடுப்பது.

1. அன்பினைந்திணை

2. இலக்கிய வழி

3. இருவர் யாத்திரிகர்

4. கண்ணகியம்மை தோத்திரம்

5. மூன்றுவதுகண் கனக. செந்திநாதன்

6. செந்தமிழ்க் களஞ்சியம்

7. சிந்தனைச் செல்வம்

8. பண்டிதமணியின் பெயரும் சு. சுசீந்திரராசா, புகழும் வந்தவாறு. **12 - 3 - 1991 Accademic forum Jaffna University**

9. சிந்தனைக் களஞ்சியம்.

10. சமயக் கட்டுரைகள்

11. காரைநகர் மணிவாசகர் சபை, பொன்விழா மலர், 1993.

12. ரங்க, வால்மீகி இராமாயணம் - அயோத்தியா காண்டம்,

13. Vaidya Ayodhyakanda, Oriental Institute, Baroda 1962.

# பண்டிதமணியும் பண்டிதர் சிதம்பரப்பிள்ளையும்

## I

அண்டர்கள் விழையு மமுதினு மினிக்குந்
தண்டமி ழுணர்ந்த பண்டித மணியே!
இலக்கியக் கலைக்கடன் முழுகி நிலைப்படு
நால்வகைச் செஞ்சொல் வால்வளை யீன்ற
மாமணிக் குவைகள் வாரித் தூநகை
இன்புடன் கேட்குந ரன்பொடு மகிழத்
தூக்கிவிலை யுரைக்கும் வாக்கினில் வல்லோய்!
எல்லாம் வல்ல இறைவ னருளாற்
பல்லாண்டு வாழ்வும் உடனலப் பாடும்
எண்ணிய வெய்தலும் ஞானமும் கல்வியும்
திருவுஞ் சிறப்பு மருவியெஞ் ஞான்றும்
ஐம்முக னருளிய கைம்முகன் றெய்வப்
பெரும்பெயர் கொண்ட வரும்புகழ்க் குரிசில்!
கைக்கவி யிருக்கக் கட்கவி வேண்டிய
அற்புத நுண்மதிப் பொற்புயர் செல்வ!
வாழிய பெரும நீயே
ஆழிசூ ழுலகி லடைவன வடைந்தே''

என, தண்டமிழ் உணர்ந்த பண்டிதமணியை வாழ்த்தியமைந்தார் நவாலியூர் சோமசுந்தரப் புலவர். சற்றேறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு இவ் வாழ்த்துக்கு உள்ளானார் பண்டித மணியவர்கள். இன்று அவரது தொண்ணூற்று நாலாவது பிறந்த தினம். 1899ஆம் ஆண்டு பிறந்த அவர் எண்பது ஆண்டுகள் வாழ் வாங்கு வாழ்ந்து 1986ஆம் ஆண்டு அமரத்துவம் பெற்ருர். புலவரால் வாழ்த்தப்பெற்றதுபோல் வாழ்விற் பெரும் பகுதியைத் தமிழுக்கும் சமயத்திற்கும் அர்ப்பணித்து அப்பழுக்கற்ற ஒழுக் கத்தைப்பேணி உயர்ந்த இலட்சியத்துடன் சீரான மனப்பாங்குடன் பெரிய வாழ்க்கை வாழ்ந்தவர் பண்டிதமணி அவர்கள். ஒரு காலத் தில் தமிழும் சமயமும் உய்ய வந்த நாயன்மார்கள் போல

ஆறுமுகநாவலர் பெருமானும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களும் அவதார புருஷர்கள் ஆவர். 1959ஆம் ஆண்டிலிருந்து 1986ஆம் ஆண்டு வரை பண்டிதமணியின் சிறப்பு வெகுவாக உணரப்பட்டது. இக் காலகட்டத்தில் அவர் பெற்றுக்கொண்ட பாராட்டுகள் அனந்தம். நூற்றுக்கணக்கான விழாக்கள் எடுக்கப்பட்டன. 1967ஆம் ஆண்டு, பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற அவரது தக்ஷகாண்ட உரை வெளியீட்டு விழா எல்லாவற்றிலும் உயர்ந்தது. நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள், இதுவரையில் வெளியிடப்பட்ட இருபத்து மூன்று நூல்கள் ஆகியன மிக விலையுயர்ந்த பெறுமதியுடையவை. அவர் மணிவிழாக் கண்டார். இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்து யாழ்ப்பாண வளாகம் ஊடாக இலக்கிய கலாநிதி பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். படித்தவர்களாலும் பாமரர்களாலும் பெரு மதிப்புடன் போற்றப்பட்டு வருகின்றார். இதனால் பல பட்டங்களையும் பெற்றார். பண்டிதமணி, சைவசித்தாந்த சாகரம், முது பெரும் புலவர், மகாவித்துவான், இலக்கிய கலாநிதி என்பன அவை. இவற்றால் 1950 களில் இருந்து 1980கள் வரை ஒரு விழா நாயகராகவே மதிக்கப்பட்டுப் போற்றப்பட்டார். சோமசுந்தரப் புலவர் ஏற்கனவே வாழ்த்தியதுபோல ''எல்லாம் வல்ல இறைவனருளாற் பல்லாண்டு வாழ்வும் உடல் நலப்பாடும் எண்ணிய வெய்தலும் ஞானமும் கல்வியும் திருவும் சிறப்பும்'' பெற்று வாழ்ந்தார் பண்டிதமணி. மக்களின் மனதில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இன்று அவரை நினைவுகூருகின்றோம்.

பண்டிதமணி தனக்கு ஒரு பரம்பரையை உருவாக்கினார். நாவலர்பெருமான் உருவாக்கியது போல பல உயர் மாணக்கர்கள் அவரிடமிருந்து உருவாகினர். பண்டிதமணியின் அறிவையும் சைவசமய உண்மைகளையும் நடைமுறைகளையும் இந்தப் பண்டித மாணக்கர் தத்தமது பகுதிகளுக்கு எடுத்துச்சென்று பரப்பினர். நாவலரின் எண்ணங்களுக்கு உருக்கொடுக்கப்பட்டது போல பண்டிதமணியின் எண்ணங்கள் உருப்பெற்றன. இன்னும் சில மாணக்கர்கள் பண்டிதமணியின் கட்டுரைகளும் நூல்களும் வெளிவர குரு பத்தியுடன் அயராது பாடுபட்டனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் வேலணையூர்ப் பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை, நீர்வேலியூர் ஆசிரியர் இ. சிதம்பரப்பிள்ளை, உரும்பிராய் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் போன்றோராகும். இவர்களுள் முதலிரு பெரியார்களும் அமரர்கள் ஆகிவிட்டனர். ஸ்ரீமான் அ. பஞ்சாட்சரம் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து பண்டிதமணியின் புகழ் பரப்ப ஆண்டவன் அவரை ஆசீர்வதிக்கட்டும்.

பண்டிதர் சரவணமுத்து சிதம்பரப்பிள்ளை அவர்கள் பண்டித மணியிடம் பயின்று நாற்பத்தைந்து வருடங்கள் அவர் வாழ்வைப் பின்பற்றி, அவரது இயல்புடன் ஒன்றி அவர் வழியிலேயே தமது போக்கினையும் அமைத்து பண்டிதமணி அவர்களுக்குப் பின்துணையாக வாழ்ந்து வந்தவர். அவர் மறைந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. இன்று பண்டிதமணியை நினைக்கின்றபோது அவரது ஆசிபெற்ற அன்பர்களில் மிக உயர்ந்தவரான பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை அவர்களையும் நினைவுகூர வேண்டும். அவரைப்பற்றியும் சில வார்த்தைகள் கூறப்பட வேண்டுமென்ற ஆதங்கம் அவரது நண்பர்களிடையே ஏற்பட்டது. அதன்விளைவு, அன்பர் அ. பஞ்சாட்சரம் அவர்கள் மூலமாக, இவ்வுரை பண்டிதரைப்பற்றியும் பண்டிதமணியுடன் பண்டிதர் கொண்ட பக்தி, பற்று, பாசம், மதிப்புப் பற்றியும் யான் அறிந்துகொண்டவற்றை மட்டும் இங்கு கூற விரும்புகிறேன்.

## II

யார் இந்த வேலணையூர் பண்டிதர் சிதம்பரப்பிள்ளை? பண்டிதமணி நினைவு மலரில் பிரார்த்தனையுரையில் அவரே கூறுகின்றார்.

> " அகண்ட பிரமசரியத்துடன் அரணியத்தில் வாழ்ந்து சிவ சம்பந்தம் பெற முயலும் யதிகள்—பிறர் ஏவலுக்குட்படாதவர்கள் ஆத்ம வாழ்க்கையே தங்கள் உலக வாழ்க்கையாகக் கொண்டு சஞ்சரிப்பவர்கள், சிவாஞானிகள் என்றிவ்வாறு வழங்கப்படும் சொற்களுக்குப் பொருளாகி நிற்பவர்கள் கலிமுதிர்ந்த இக்காலத்திலும் உளர் என்பதற்குச் சான்றாகிய பண்டிதமணி யவர்களிடம் அத்துவிதியாகி நாற்பத்தைந்து வருஷம்—நீண்டகாலம்—ஒரு 'மஹிமையை அநுபவித்துத் தளிர்க்கின்றேன் "

கலிமுதிர்ந்த இக்காலத்திலும் அவதாரபுருஷராகத் தோன்றிய பண்டிதமணியிடம் மகிமையை அநுபவித்துத் தளிர்க்கின்றேன் என்று பிரார்த்திக்கின்றார் பண்டிதர் அவர்கள். எவ்வளவு அவையடக்கத்துடன் 'அநுபவித்துத் தளிர்க்கின்றேன்' என்று கூறினாரோ அதே அவருடைய ஆளுமை. பண்டிதமணியின் நூல் வெளியீட்டுச் சபையின் தலைவராக, திருநெல்வேலி, ஆசிரிய கலாசாலை அதிபராக இருந்த திரு. சி. சுவாமிநாதன் அவர்களுக்குப் பின் நீண்டகாலம் கடமையாற்றியவர் அவர்கள். பண்டிதர்

சிதம்பரப்பிள்ளையின் தலைமையுடன் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்களைச் செயலாளராகவும், கொழும்புத்துறை திரு. த. இராசேந்திரம் அவர்களைப் பொருளாளராகவும் கொண்ட இந்த வெளியீட்டுச் சபை பண்டிதமணியின் இருபத்து மூன்று நூல்களிற் பெரும்பாலானவைகளைக் காலத்துக்குக்காலம் பலரும் பாராட் டத்தக்கவகையில் சிறந்தமுறையில் வெளியிட்டுள்ளது. பண்டிதமணி அவர்கள் சார்பில் பல மலர்களை வெளியிட்ட துடன் விழாக்களையும் நடத்திப் பெருமையைப் பெற்றுக்கொண் டது பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை. பண்டிதமணியின் காத்திரமான பாரிய எழுத்து வேலைகள் என்றால் பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளையே செய்து கொடுப்பார். அலையடங்கிய சமுத்திரம்போல அமைதியுடையவரான பண்டிதரவர்கள் பண்டிதமணியிடம் அவரது எழுத்துக்களைப் பெற்றுச் சென்று அவற்றை மிகவும் அழகாகப் பிரதிசெய்து கொண்டுவருவார். அவசியமான விடயம் என்றால் திருநெல்வேலியில் தங்கியிருந்து பிரதிசெய்து கொடுப்பார். பண்டிதமணி அவர்களால் பல முறை பாராட்டப் பெற்றவர் பண்டிதர் அவர்கள். "மிகவும் நன்றாகப் பிரதிசெய்திருக்கின்றீர்கள், எனது மனக் கருத்தை உங்கள் எழுத்துத்தான் மேலும் சிறப்பித்துள்ளது" என்று பண்டிதமணியவர்கள் பண்டிதர் சிதம்பரப்பிள்ளை அவர்களைப் பல சந்தர்ப்பங்களிற் பாராட்டி இருக்கின்றார்கள். பண்டிதமணி யின் எழுத்து வேலைகளுக்கும் நூல் வெளியீட்டுச் சபையின் பாரிய முயற்சிகளுக்கும் பண்டிதர் அவர்கள் ஒப்பற்ற பணி செய் துள்ளார். பண்டிதமணி அவர்களின் அந்தரங்க ஆலோசகராக வும் இருந்துவந்துள்ளார். இதனைப் பண்டிதமணி அவர்களே தமது தக்ஷகாண்ட உரையின் முன்னுரையில் பின்வருமாறு சிறப்பாகக் கூறியுள்ளார்.

> "கையெழுத்துப் பிரதியை அச்சுக்கேற்றவாறு அழகுற எழுதி உதவியவர் பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை. அவர் எழுதியதை மேற்பார்வை செய்து நுண்மையவாய பல்வேறு திருத்தங்கள் செய்தவர் பண்டிதை த. வேதநாயகி அம்மை யார். இருவரும் வேலணையில் நாவலர் அவர்களின் மாணவ பரம்பரையிற் சைவத்தையும் தமிழையும் பேணி வளர்த்த குடும்பத்தில் உதித்தவர்கள்."

பண்டிதமணி அவர்கள் எழுதிய நாவலர் பற்றிய பல கட் டுரைகள் தொகுக்கப்பட்டு ஆறுமுகநாவலர் என்னும் தலைப்பில் நாவலர் நூற்றாண்டு நினைவு மஞ்சரியாக 1979ஆம் ஆண்டு வெளி யிடப்பட்டது. இதன் வெளியீட்டுரையில் "இந்நூல் உருவாவ

தற்கு, பண்டிதமணி பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதிய இருபத்தேழு கட்டுரைகளையும் மின்வேகத்தில் தேடித் தொகுத்தும், பிரதி செய்தும் உதவிய வேலணையூர்ப் பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை அவர்களுக்கும் நீர்வேலியூர் ஆசிரியர் இ. சிதம்பரப்பிள்ளை அவர்களுக்கும் நன்றி கூறப்படுகின்றது'' இதனைக் கூறியவர், தென்மராட்சி பண்டிதமணி பாராட்டு விழாச்சபையின் செயலாளர் பண்டிதர் பொ. கந்தையனார் அவர்களாகும்.

பண்டிதமணியவர்களுக்கு இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டமையை யொட்டி, பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் அவர்கள் தலைமையில் 14-08-1978இல் யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. பண்டிதமணி அவர்களின் அன்பினைந்திணை, அத்வைத சிந்தனை ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் தலைமையில் திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள கலாமன்றத்தில் 30-06-1985இல் நடைபெற்றது. இந்த இரண்டு வைபவங்களிலும் பண்டிதர் ஆற்றிய வரவேற்புரைகளைச் சமூகம் அளித்திருந்தவர்கள் மறந்திருக்கமுடியாது. மேலும் 1955ஆம் ஆண்டு வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் திருமுறை விழா நடைபெற்றது. முன்னாள் ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. ஏ. கந்தையா அவர்களும், கரம்பொன் திரு. ப. நீலகண்டன் ஆசிரியர் அவர்களும் இதனை முன்னின்று நடத்தினார்கள். இவ்விழாவிற்குப் பண்டிதமணியவர்கள் சமூகம் அளித்தபோது வேலணை மேற்கில் பண்டிதருடன் தங்கியிருந்து தனது விருந்தோம்பும் சேவையினைப் பண்டிதமணிக்கு அளித்தவர் பண்டிதர் சிதம்பரப்பிள்ளை அவர்கள். ஆகவே இத்தகைய பண்டிதர் அவர்களை பண்டிதமணி அவர்களுடன் ஒருங்கிணைந்து நினைவுகூருவது பண்டிதமணியவர்களுக்கே உகந்த செயலாக இருக்கும்.

## III

பண்டிதர் அவர்களும் அவர்களது சிற்றன்னை பண்டிதை வேதநாயகி அவர்களும் எனது ஆரம்பகால ஆசிரியர்கள். தமிழும் சமயமும் அவர்கள் ஆரம்பித்து வைத்ததுதான். அவர்கள் அறிவுறுத்தலின்படி நெல்லாவிலில் நாம் போய்க் கல்வி கற்றோம். அவர்கள் அறிவுறுத்தலின்படி அயலிலுள்ள முடிப்பிள்ளையார் ஆலயத்துக்கும் சென்று வருவோம். பண்டிதர் வாலிபப் பருவத்

தில் நான் ஆரம்பப்பள்ளி மாணவன். இதனுல் அக்காலத்தில் அப்போதிருந்தே அவரை நன்ருகத் தெரியும். எனது கல்வி யுயர்ச்சிக்குக் காணும் சமயமெல்லாம் பாராட்டுவார். அறிவுரை பகர்வார்; அதனுல் அவர் நினைவாகச் சில வார்த்தைகள் கூற இந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது.

எமது பிரதேசங்கள் வெளியார் ஆட்சிக்குட்பட்ட 17, 18, 19ஆம் நூற்ருண்டுகள் எமக்கு இருண்ட காலமாகின. ஆங்காங்கே திண்ணைப் பள்ளிக்கூடங்கள். குருகுலங்கள் தவிர மேற்கு நாட்டார் வருகையுடன் மேற்குலகக் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மதமாற்றத்துடன் அக்கல்வி நிலையங்கள் தொடர்புபட்டு இருந்தன. சைவமும் தமிழும் இடுக்கண்ணுக்கு உள்ளாகியதைக் கண்டு நாவலர் பெருமான் தலைமையில் 19ஆம் நூற்ருண்டில் ஒரு பாரிய திருப்பம் ஏற்பட்டது. இதனுல் 19ஆம் நூற்ருண்டின் பிற்காலம் ஆன்மிக மறு மலர்ச்சிக்காலமாக மாறியது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் வழிகாட்டலின் கீழும் அவர் பின்வந்த நாவலர் பரம்பரைக் கல்வியாளர்களின் கீழும் இந்த மறுமலர்ச்சி ஏற்பட ஆரம்பித்தது. சைவ மாணவர்களின் கல்வி சைவ சமயச் சூழலில் நடைபெற வேண்டும், அவர்களின் ஆன்மிக அறிவையும் சமய அனுட்டானத்தையும் வளர்த்து சைவசமயத்தையும் வளர்க்க வேண்டுமென்ற நிலைப்பாடு ஏற்பட்டது. இதன் காரணமாகச் சைவப் பள்ளிக்கூடங்களை எல்லாரும் அமைக்கவேண்டும் என்ற இயக்கம் ஏற்பட்டது. நாவலர், சேர் பொன் இராமநாதன் போன்ருேரால் முன்னெடுக்கப்பட்டுச் சிறப்பாகப் பின்பற்றப்பட்டது. சைவச் சூழலில் கல்வி கற்பிப்பதற்கெனப் பல வழிகளை முன்னெடுக்கும் ஒரு நாவலர் பரம்பரை, ஒரு நாவலர் கலாசாரம் உருவானது. இந்தப்பரம்பரை நடைமுறையில் கைக்கொள்வதற்காகப் பாலபாடம் சைவவினுவிடை போன்ற புத்தகங்கள் உருவாக்கப்பட்டன. இவர்களின் கொள்கைகளை மக்களிடம் பிரபல்யப் படுத்த இந்துசாதனம், Hindu Organ போன்ற பத்திரிகைகளும் ஆரம்பித்து நடைமுறைப்படுத்தப்பட்டன.

இந்த நாவலர் பரம்பரையை முன்னேடியாகக் கொண்டு சைவச் சூழலில் கல்வியையும் ஆத்மீக வளர்ச்சியையும் நடைமுறைப்படுத்த எமது பிரதேசத்தில் முயற்சிகள் எடுக்கப்பட்டன. நாவலர் எமது பிரதேசத்தில் மட்டுமல்லாது தமிழ் நாட்டிலும் இம்முயற்சிகளை உருவாக்கினுர். இந்த வகையில் வேலணையில் 'நெல்லாவில்' எனக் கூறப்படும் இடத்தில் நாவலரது மாணுக்கர்கள் ஆத்மிகவறிவையும் தமிழ் மொழி வளர்ச்சியையும் ஆரம்

பித்தார்கள். இங்கு முளை கொண்ட எண்ணக் கருவின் முன்னோடி ஸ்ரீமான் வி. கந்தப்பிள்ளை அவர்கள் ஆவர். இவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் மாணாக்கர்; சைவசித்தாந்த அறிஞர். அவரிடம் மிகுந்த பரவச பக்தி யுடையவர். அக்காலத்தில் யாழ்ப்பாணம், கொழும்பு, சிதம்பரம் ஆகிய பகுதிகளில் சைவசித்தாந்த பிரசங்கம் செய்துவந்தவர். இவர் நாவலரின் விருப்பத்துக்கு இணங்க நெல்லாவிலுக்கு வடகிழக்காகச் சைவப்பிரகாசவித்தியாசாலையை அமைத்தார். 1879இல் தனியார் வீட்டில் உருவாக்கப்பட்ட இந்த அறிவாலயம் 1880இல் நிரந்தர இடத்தில் அமைக்கப்பட்டது. தொடர்ந்து நெல்லாவிலின் மேற்குப் புறத்தில் நடராசா வித்தியாசாலை அமைக்கப்பட்டது. இவைகளுக்கு அண்மையில் பெரிய புலம் முடிப்பிள்ளையார் ஆலயமும் அமைந்திருந்தது. இதனால் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து கல்வி பயிற்றப்படுவது மாத்திரமல்லாது சமய அனுட்டானங்களான சமய தீட்சை, குரு பூசைகள், புராண படனங்கள் என்பன தொடர்ச்சியாக நடைபெற்று வந்தன. இதே சமயம் 1885இல் முடிப்பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெற்று நித்திய நைமித்திகங்கள் தொடர்ந்தன. நெல்லாவிலில் சைவநாயன்மார் குருபூசைகளும் மாகேஸ்வர பூசையும் மாலையில் உபநியாசங்களும் வருடந்தோறும் இடம்பெற்றன. நெல்லாவில் சைவசமய ஆதீனம் சிதம்பரம் கரணவாய், இணுவில் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த சைவசமய ஆதீனங்களுடன் பரம்பரைத் தொடர்பும் கல்வித் தொடர்பும் கொண்டிருந்தது. ஸ்ரீமான் கந்தப்பிள்ளையைத் தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ நாகலிங்க உபாத்தியாயர், ஸ்ரீலஸ்ரீ தம்பு உபாத்தியாயர், ஸ்ரீலஸ்ரீ கனகசபாபதிப்பிள்ளை (இராசா) உபாத்தியாயர், ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்க உபாத்தியாயர், ஸ்ரீலஸ்ரீ இராமலிங்க உபாத்தியார், ஸ்ரீலஸ்ரீ பேரம்பலம் உபாத்தியாயர், சித்தாந்த பண்டிதர் சு. ஏரம்பு ஆசிரியர் ஆகியோர் மேற்கூறிய நெல்லாவில் அனுட்டானங்களிலும் வித்தியாசாலைகளிலும் ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். மேலும் சைவ அறிவை வளர்ப்பதற்காக நடராசா வித்தியாசாலையில் சைவப்பிரகாச அச்சியந்திரசாலை அமைக்கப்பட்டது. இங்கு மாதாந்த வெளியீடாக 'சைவ சூக்குமார்த்த போதினி' ஸ்ரீலஸ்ரீ கனகசபாபதிப்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது. ஆக இந்தச் சூழல்தான் பண்டிதர் சிதம்பரப்பிள்ளையின் பரம்பரையின் சூழலாகவும் பின்பு அவர் வளர்ந்த சூழலாகவும் அமைந்தது. 1919இல் பிறந்த அவர் 20ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் இருந்து சைவப்பரம்பரையை வளர்ந்து வந்தார். நடராசா வித்தியசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்ற அவருக்கு

அவருடைய மாமன் பண்டிதர் மருதையினுர் அவர்களும் அவர்தம் சிற்றன்னை பண்டிதை த. வேதநாயகி அவர்களும் வழிகாட்டினர். இவர்களும் பண்டிதமணியவர்களிடம் பெருமதிப்புக் கொண்டவர்கள். இதனுல் இந்தப் பின்னணி கொண்ட சிதம்பரப்பிள்ளையவர்கள் மிகஇலகுவாகப் பண்டிதமணியவர்களால் ஆட்கொள்ளப் பட்டார். மேற்படி வேலணையின் சைவபாரம்பரியத்தைப் பண்டித மணியவர்கள் பாராட்டியுள்ளார். வேலணையின் தனிச்சிறப்பு மேன்மைகொள் சைவம். சைவம் மற்றையவற்றுக்குப் பொதுவாகவும் வேலணைக்குச் சிறப்பாகவும் அமைந்தது. ஸ்ரீமான் வி. கந்தப்பிள்ளை அவர்கள் நாவலர் பெருமாேைடு நெருங்கிய தொடர்புடையவர்கள். தத்துவப்பிரகாசம் சிவநெறிப் பிரகாசம் என்கின்ற அருமையான நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தியவர்கள் எனப் பண்டிதமணி அவர்கள் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை நூற்றுண்டு விழா மலரில் கூறியுள்ளார்கள்.

## IV

இத்தகைய சூழலில் வந்த சிதம்பரப்பிள்ளையவர்கள் இயற்கையாகவே சைவ சமய அறிவும் அதனிடம் பற்றுங்கொண்டார். அவருடைய வளர்ச்சிக்கு நெல்லாவில் நிலைக்களனுகியது. பின்பு 1940 களில் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் ஆசிரிய பயிற்சியும் பெற்றுக்கொண்டார். அதே சமயம் பண்டிதமணி அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார். தொடர்ந்து மதுரைத்தமிழ்ச்சங்க பண்டிதர் பட்டத்தையும்பெற்றுர். 1945ஆம் ஆண்டுவேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பித்த ஆசிரியப்பணி 1978வரை நீடித்தது. திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் ஆசிரியத் தொழில் செய்கின்றபோது பண்டிதமணியுடன் நெருக்கம் கொண்டார். தொடர்ந்து அனலைதீவு, புங்குடுதீவு, கரம்பொன், சரவணை, வேலணை ஆகிய இடங்களில் இவரது ஆசிரிய சேவை இடம்பெற்றது. பெரும்பாலும் தீவகம் முழுவதும் இவர் சேவையாற்றினுர். இறுதியாகத் திரும்பவும் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு வந்து அங்கு 1971 தொடக்கம் 1978 வரை அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுர். இவரது காலத்தில் வித்தியாசாலை புதுப்பொலிவு பெற்றது. நாவலர் எண்ணத்தினை, கந்தப்பர் கருவூலத்தை, பண்டிதமணியின் சிந்தனைகளை இணைத்து, சைவத்தையும் தமிழையும் வளர்க்க மிகப் பொருத்தமாகச் செயற்பட்டார். நாவலர், பண்டிதமணி போன்று பிரமச்சாரியாக வாழ்ந்த இவர் தமது முழுநேரத்தையும் அர்ப்

பணித்து இவ்வித்தியாசாலைக்குத் தனிப்பெயரை உருவாக்கினார். பின்பு உடலாலும் உள்ளத்தாலும் இளமையுடன் விளங்கியும் வயதால் ஓய்வு பெற்றார்.

இவரது ஆசிரியப்பணி மிகவும் சிறப்பானது. மாணவர்களை அவர்களின் தரங்கண்டு, அவர்களின் ஆற்றலுக்கு ஏற்பத் தேவையான அளவைக் கற்பித்தல் இவரது ஆற்றல் எனலாம். கற்பித்தவற்றை மனதில் பதித்து, தனதாக்கிப் பெற்ற அறிவுவளர்ச்சியை மதிப்பீடு செய்து மீள வலியுறுத்தல் செய்தபின்பே புதிய பகுதிகளைக் கற்பிப்பார். இவரிடம் கல்வி கற்ற மாணவர் கற்றவற்றை மறப்பது அரிது. அவ்வாறு கற்ற மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெறாது விடுதல் அரிது. இவரது மாணவர்கள் போட்டிப் பரீட்சைகளில் முதலிடத்தையே பெறுவார்கள். மாணவரது முழுமையான வளர்ச்சிக்கு அறிவு வளர்ச்சி மாத்திரம் போதியதன்று என்ற உளவியலாரின் கருத்துக்கேற்பச் சிறந்தமனப்பாங்குகளான சமயதீட்சை, சைவ போசனம், சைவ அநுட்டானம் என்பனவற்றை நடைமுறைப் படுத்தினார். சைவ சமயவிழாக்கள், குருபூசைகள், இலவச சமயதீட்சை ஆகியவற்றை நடாத்தினார். இதனால் வேலணையில் குறிப்பிட்ட தொகையினர் சமயதீட்சை பெற்றவராக இருந்தனர். ஓய்வு பெற்ற பின்னும் இலவசமாகப் பிள்ளைகட்கு, தமிழ், சமயம், கணிதம் ஆகியனவற்றைப் போதித்தார். இதன்காரணமாக நான், எனது மனைவி, எனது மகள் ஆகியோர் வெவ்வேறு காலத்தில் அவரிடம் கல்வி பயில வாய்ப்புப் பெற்றோம். அவர் விரும்பியிருந்தால் யாழ்ப்பாணம் வந்து பண்டித வகுப்புக்களுக்குப் பயிற்றுவித்திருக்கலாம். ஆயினும் அவர் தமது பகுதிக்கும் பண்டிதமணிக்கும் சேவை செய்தார். இறுதியில் படையினரின் நெருக்கடியால் வேலணையில் இடம் பெயர்ந்து 27-04-1991இல் கொழும்புத்துறையில் வசித்துவந்தார். பின்பு அங்கு 13-06-1991இல் சடுதியாகச் சிவபதம் அடைந்தார்.

## V

ஆசிரிய கலாசாலையில் பண்டிதமணி அவர்கள் விரிவுரையாளராக இருந்த காலம் தொட்டு அவர் பண்டிதமணியை இணைபிரியாதவராக மாறினார்; பிரதான சிஷ்யரானார். வாரந்தோறும் பண்டிதமணியைச் சென்று பார்த்து, இலக்கிய இலக்கண ஆய்வுகள் கேட்டு ஆய்வுகளை எழுத்தில் வடித்து நூல் உருவமாக்கிக் குருத்தொண்டு செய்து வந்தார். பண்டிதரவர்கள்

எப்போதும் தூயவெண்ணிற ஆடை அணிபவர். வெள்ளை வேட்டி, வெள்ளை நாஷனல், வெள்ளைச் சால்வை அணிந்து திருநீற்றொளியும் திலகமும் விளங்கக் காட்சியளிப்பார். உள்ளும் புறமும் தூயவர். அவர் பண்டிதமணியைப் பார்க்க வரும் போது திருநெல்வேலிச் சந்தியிலேயே சால்வையை எடுத்து அரையில் கட்டிக் கொள்வார். பண்டிதமணியுடன் கதைக்கும் போதும் அங்கு உலாவுகின்ற போதும் அவரது சால்வை அரையில் தான் இருக்கும். அவரது ஒரு கையில் கறுத்தக் குடையும் மறுகையில் ஒரு காவிப் பையும் இருக்கும். இந்தப் பையிலும் இரு விடயங்கள் இருக்கும். ஒன்று பண்டிதமணிக்கான உபகாரப் பொருள்கள். மற்றது கஸ்தூரியார் வீட்டு மருந்துகளும் குடிநீர்ச் சரக்குவகைகளும். ஆக அவரின் யாழ்ப்பாணப் பயணம் இரு விடயங்களுக்காக நடைபெறும். ஒன்று பண்டிதமணியைத் தரிசித்தல்; அவர் இடும் அன்புக் கட்டளைகளைச் செய்தல். மற்றது கஸ்தூரி முத்துக்குமாரு வீடு.

1960ஆம் ஆண்டில் இருந்து 1985ஆம் ஆண்டு வரை பண்டிதமணி அவர்களின் இல்லத்தில் புதுவருட தினத்தன்று கைவிசேஷ நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம். இந்த நிகழ்ச்சிகளில் பண்டிதர் அவர்கள் தவறுமற் பங்குபற்றுவார். அப்பொழுது பண்டிதர் அவர்கள் இறைவன் சந்நிதியில் அஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்வது போல் வீழ்ந்து வணங்கி பண்டிதமணியிடம் கைவிசேஷம் பெற்றுக் கொள்வார். அவ்வளவு குருவின்மேல் தெய்வீக பக்தி கொண்டவர் பண்டிதர். பண்டிதருடன் அவரது சிற்றன்னையாரான செல்வி பண்டிதை த. வேதநாயகி அவர்களும் பண்டிதமணியைக் குருவாகக் கொண்டவர். அவரும் மேற் கூறிய கைவிசேஷ நிகழ்ச்சியில் மகனுடன் கலந்து கொள்வார். குருவினுடைய நூல்கள் கட்டுரைகளைப் பிரதி பண்ணுவதும், சரிபார்ப்பதும் கலந்து உரையாடித் தீர்வு எடுத்துக் குருவுடன் யோசித்து முடிவெடுப்பதும் இவர்களது வழக்கமாகும்.

பண்டிதமணியின் நூல் வெளியீட்டுச் சபைத் தலைவராக இருந்த போதும் அதை அவர் யாரிடமும் கூறித் திரிவதில்லை. அது மட்டுமல்லாது எந்த வெளியீட்டுரையையும் எழுதவும் இல்லை. ஆக பண்டிதமணியின் நினைவு மலரில் தான் ஒரு சிறு பிரார்த்தனை உரை நிகழ்த்தியிருக்கிறார். பண்டிதமணியின் நூல் வெளியீட்டுச் சபைத் தலைவர் என்ற ரீதியில் ஏதாவது எழுதுங்களேன் என்று அவரது நண்பர்கள் கேட்டால் பெரியவர்கள்;

நன்றுக எழுதட்டும். பண்டிதமணி ஐயா அவர்களைப் பற்றி எழுதுவதற்கு ஏற்ற தகுதி எனக்கு உண்டோ என்று கேட்பார். குருவை விஞ்சிய சிஷ்யர் வாழும் இக்கலியுலகில் இப்படியான குரு - சிஷ்ய உறவை எவ்வாறு போற்றுவது.

செம்மையுறும் ஆசிரியன் சீர்சால் வாழ்வு
சிறந்த தமிழ்ப் பண்டிதரின் சிறப்பு வாழ்வு
மும்மையுல குள்ளவர்க்கும் எடுத்துக் காட்டு
மூதறிஞர் பல்லவர்க்கும் இனிமை யூட்டு
தம்முடைய மாணவரை விரும்பி யேற்கும்
தமிழ்த் தந்தை பண்டித மணியாரோடு
எம்முடைய சிதம்பரனார் ஒன்றாய்ச் சேர்ந்து
இனிய தமிழ்ச்சபை உம்பர் அமைப்பாராக.

(பண்டிதை பொன். பாக்கியம், சுழிபுரம்)

இறுதியில் தாம் சேர்த்து வைத்த நூல்களையும், தொகுப்புகளையும் வேலணையில் விட்ட துயரமும், அவருடன் இறுதிக் காலத்தில் சேர்ந்த வியாதியும் அவர் மிக விரைவில் காலமாகக் காரணமாகின. வாழ்க பல்லாண்டு அவர் நாமம்; அவர் பணி.

## உசாத்துணை நூல்கள்


1. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் - கந்தபுராணம் தக்ஷகாண்ட உரை. இந்து மாணவர் சங்கம் இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனை 1967

2. இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பாராட்டு விழா, இலக்கிய கலாநிதி மலர், பாராட்டு விழாச் சபை 1978

3. இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆறுமுக நாவலர் – நாவலர் நூற்றாண்டு நினைவு மஞ்சரி தென்மராட்சி பாராட்டு விழாச்சபை 1979 சாவகச்சேரி.

4. நூற்றாண்டு விழா மலர் (1880 - 1980) சைவப்பிரகாச வித்தியாசாலை 1980 வேலணை

5. இ. சிதம்பரப்பிள்ளை, மட்டுவில் தந்த பண்டிதமணி சி. க. 1988 மட்டுவில்

6. பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை பண்டிதமணி அவர்கள் பற்றிய நினைவுப் பேருரை - பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை 1989.

7. பண்டிதமணி நினைவு மலர் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை 1988

8. மகாகும்பாபிஷேக மலர் பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார் ஆலயம்) 1990 வேலணை

9. பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை அவர்களின் சிவசங்கமத்திற்காக மலர் தூவல் 1991 கொழும்புத்துறை.

## பண்டிதமணியின் மும்முகங்கள்

பண்டிதமணி கவிதை கற்பித்தற்கலை கைவந்தவர்.

ஈழத்துத்தமிழறிஞர்களோ, புலவர்களோ தென்னகத்தாரிலும் உயர்ந்தவர்கள் என்பது அவர் மனக்கோலம்.

அன்பினைந்திணை என்பது அவர் இலக்கியக் கோட்பாடு.

க. சச்சிதானந்தன்
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.